# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

செப்டம்பர் - 2015
பருவம்1 புனல் 12

தனிச்சுற்றுக்கு
நன்கொடை ரூ20



# “சுதந்திரத் தமிழ்நாடு எனது இலட்சியம்”

எனது 95ம் ஆண்டு பிறந்தநாள் துவக்கத்துக்கு வழமைபோல் ஆண்டு மலரில் ஒரு கட்டுரை எழுதவேண்டியிருக்கிறது. அதை முன்னிட்டு இக்கட்டுரை எழுதுகிறேன். அப்படி எழுதப்படும் இக்கட்டுரை என்னால் ஆண்டு மலர்களுக்கு எழுதப்படும் கட்டுரைகளில் இதுவே கடைசியான கட்டுரையாக இருந்தாலும் இருக்கலாம் . ஏன் இப்படி எழுதுகிறேன் என்றால், அடுத்த ஆண்டு மலர் எழுதப்பட வேண்டிய காலத்தில் நான் இருப்பேனோ, இல்லையோ என்கிற பிரச்னை மாத்திர மல்லாமல், எழுதும்படியான வாய்ப்பு இருக்குமோ, இருக்காதோ என்பதே முக்கிய காரியமாகும்.

ஏனெனில், இன்னும் நாம் இருப்பது போலவே அதாவது, இந்திய ஆட்சி என்பதற்குள் பிரஜையாகவும், சமுதாயத்தில் நாலாஞ் சாதி (சூத்திர மக்களாகவும்) சட்டப்படி, சாஸ்திரப்படி பார்ப்பானின் தாசி மகன் என்னும் பெயருடன் நமது தாய்மார்கள் பார்ப்பானின் தாசிகளாவும் இருக்கும் தன்மையாலேயே இருப்போமா என்கின்ற கருத்தைக்கொண்டே இப்படி எழுதுகிறேன். நம்மில் பலர் சிறையில் இருக்க நேரிடலாம்

இந்திய அரசியல் சட்டப்படி நாம் இந்திய ஆட்சியில் பிரஜையாக இருக்கும் வரை இந்துவாய் அதாவது, கிறிஸ்துவனாகவோ, முஸ்லீமாகவோ நாம் மதம் மாற்றிக் கொள்ளாதவரை நாம் நமது பண்டார சன்னதிகள் உட்பட பவுத்தனுக்கும், ஜெயினனுக்கும் சமானமாக இருக்கும்படியாக இருந்தாலும் பகுத்தறிவுவாதியாக இருந்தாலும், வேறு எந்தப் பெயரில் வாழ்ந்து வருவபவனாக இருந்தாலும் சூத்திரர்களாகத்தான், பார்ப்பானின், தாசி மகனாகத்தான் இருந்தாக வேண்டும்.

இது தான் இன்றைய இந்திய அரசியல் சட்டமாகும். இந்தச் சட்டத்தைத் திருத்தவோ மாற்றவோ நம் மக்களுக்கு ஒருநாளும் சக்தியோ, உரிமையோ ஏற்படும் என்று கருதவே முடியாத நிலையில் இருக்கிறோம். அதுமாத்திர மல்லாமல் இந்திய ஆட்சியில் இருந்து தமிழ்நாட்டை விலக்கிக் கொள்ள முயற்சி செய்தே ஆகவேண்டிய ஒரு கட்டாயமான நிர்ப்பந்தமான நிலையில் இருக்கிறோம். இந்த முயற்சியில் நாம் இந்திய ஆட்சியிலிருந்து விலகிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமா என்பது பற்றி நமக்கு முடிவு செய்துகொள்ள முடியாமல் இருந்தாலும் இம்முயற்சியில் நாம் பலர் சிறையில் இருக்க நேரிடலாம் என்கிறதாலேயேதான் இந்தப்படி எழுதுகிறேன்.

தோழர் பெரியாரின் இறுதிப் பிறந்தநாள் கட்டுரை. 17.09.1973- விடுதலை 95 வது பிறந்தநாள் மலர்





இதன் தொடர்ச்சி பின் அட்டையில்

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

ஆசிரியர்
சி. இராவணன் 97868 89325

உரிமை & வெளியீடு
சி.விஜயராகவன்

சட்ட ஆலோசனைக்குழு
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரத் தொடர்பு
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

விற்பனைத் தொடர்பு
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

சந்தா தொடர்பு
அ. கிருட்டிணகுமார்
97882 97428

வடிவமைப்பு
Mukizh Media

அச்சு
செல்வக்குமார்
BS Graphics, Chennai

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com



# பகுத்தறிவாளர்களின்

## படுகொலையும் – எதிர்வினையும்

கர்நாடகாவின் பகுத்தறிவு எழுத்தாளரும், ஹம்பி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் கல்பர்கி இந்து மதவெறி அமைப்புகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ஏற்கனவே மராட்டிய மாநிலத்தில் நரேந்திர தபோல்கர், கோவிந்த பன்சாரே ஆகிய பகுத்தறிவாளர்களும் இதே போல இந்து மதவெறி அமைப்புகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

*பார்ப்பனராகப் பிறந்தாலும், கர்நாடகாவில் பகுத்தறிவுத் தளத்தில், இலக்கியத்தளத்தில் பெரும்பணியாற்றிய யு.ஆர்.அனந்தமூர்த்தி அவர்கள் கடந்த 22.08.2014-ல் மறைந்தார். ஞானபீடவிருது, பத்மபூஷண் விருதுகளைப் பெற்றவரும், கர்நாடகாவின் அனைத்து அரசியல் தலைவர்களோடும் நன்கு அறிமுகம் உள்ளவருமான அனந்தமூர்த்திக்கே ஆர்.எஸ்.எஸ் உள்பட இந்துமதவெறி அமைப்புகள் அனைத்தும் கடும் நெருக்கடிகளைக் கொடுத்தன. அவை கொடுத்த கடும் மனஉளைச்சல்தான் அவரை மரணத்திற்கே தள்ளின.*

*யு.ஆர். அனந்தமூர்த்தி பார்ப்பனர்களைக் கடுமையாக விமர்சித்து எழுதிய நாவலான ‘சம்காரா’ திரைப்படமாக எடுக்கப்பட்டது. அதில் தனது நடிப்புப் பயணத்தைத் தொடங்கியவர் ‘க்ரீஷ் கர்னாட்’. தமிழில் காதலன், செல்லமே, முகமூடி போன்ற திரைப்படங்களில் நடித்தவர் கன்னட எழுத்தாளர் க்ரீஷ் கர்னாட். இவர் மீதும், மரளு சித்தப்பா என்ற பகுத்தறிவு எழுத்தாளர் மீதும் கர்நாடகாவில் உள்ள சிவசேனா, பஜ்ரங்தள், ஸ்ரீராம் சேனா, வி.எச்.பி போன்ற அமைப்புகள் கடும் கோபத்தில் உள்ளன. பேராசிரியர் கே.எ.பகவான் அவர்களுக்கு கொலை மிரட்டலே விடுக்கப்பட்டுள்ளது.*

*பகுத்தறிவாளர்களுக்கு தொடர்ச்சியாக நடந்துவரும் கொலைகள், கொலை மிரட்டல்களைக் கண்டித்து தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான இந்து மதவெறி அமைப்புகளுக்கு எதிராகக்களத்தில் நிற்கும் அமைப்புகள் அனைத்தும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.*

அறிவியலாளர்களுக்கும், பகுத்தறிவாளர்களுக்கும் மரணத்தைப் பரிசாக அளிக்கும் கொடும் வரலாறு மிக நீண்டது. தோழர் பெரியார் தனது ஆங்கில ஏடான revolt ல் 1929 லேயே விரிவாக ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். அதைச் சுருக்கமாக இங்கே தந்துள்ளோம்.

புதிய சிந்தனைகளை வெளியிட்டமைக்காகப் பண்டைய கிரேக்க அறிஞர் பித்தகோரஸ் பழைமை வெறியர்களால் துரத்தப்பட்டு, கடலில் ஆழ்ந்து அமைதி தேடிக்கொண்டார்.

இளைஞர்களை அரசு ஏற்றுக்கொண்ட 'கடவுளர்' களிடமிருந்து பிரித்தார் என்று குற்றஞ்சுமத்தப்பட்டு, நஞ்சருந்தி இறந்தார் சாக்ரட்டீஸ்.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் மத நிறுவனத்தைத் துணிச்சலாக எதிர்த்த ப்ரெஷ்யாவின் ஆர்னால்ட் தூக்கு மரத்தில் தொங்க விடப்பட்டார்.

சமய நிறுவனத்தின் தீயபண்புகளை 15ஆம் நூற்றாண்டில் எதிர்த்த புகழ்தோய்ந்த இத்தாலியச் சீர்திருத்தக்காரர் சவோனரோலாவை வேட்டையாடி எரித்தனர்.

16ஆம் நூற்றாண்டில் அறிவு விடுதலை வேண்டிப் போராடிய பாவியாவின் உல்ரிச் வான் ஹட்டன் உடைமைகள் அனைத்தும் இழந்துவிட்ட நிலையில் தன்னைக் காத்துக்கொள்ளும் பொருட்டு அடிமட்டப் பணியாளர் படையில் சேருமாறு நேரிட்டது.

அதே நூற்றாண்டில் தாமஸ்முவென்சர் எதிரிகளால் விரட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

அறிவுநூல் பதிப்பாளர் எட்டியர் டோலட் சமய எதிர்ப்பாளராகக் கருதப்பட்டு எரிக்கப்பட்டார்.

17 ஆம் நூற்றாண்டில் உரியேல் அகோஸ்டா என்ற மதமெய்ப்பொருளாளர் தொடர்ந்து துன்புறுத்தலுக்கு இலக்காகி இறுதியில் தானே சுட்டுக்கொண்டு மாண்டு போகமாறு செய்யப்பட்டார்.

மதநம்பிக்கைக்கு எதிரான அறிவியற் கருத்துக்களை வெளியிட்ட ஜியார்டனோ ப்ரூனோவை உயிரோடு எரித்துக் கொன்றனர்.

கருத்துரிமை எழுத்தாளர் லூசிலியோவை நாததிகக் கருத்துக்களைப் பரப்பினார் என்று தீர்ப்பளித்து ஈம விறகடுக்குக்கு அனுப்பி வைத்தனர்.

கலிலியோவை இருண்ட நிலவறையில் போட்டு வாட்டி எடுத்தனர்.

ஜெர்மானியப் பதிப்பாளர் ஜோகன் ஜேகப் மோசர் அய்ந்தாண்டு கடுங்காவலில் வைக்கப்பட்டார்.

மார்ஸேல்ஸ் எனும் நூலின் ஆசிரியரான ரோஜர் டிலைஸ் தனது இறுதிக்காலத்தைச் சிறைக்கூடத்தில் கழிக்க நேரிட்டது.

19 ஆம் நூற்றாண்டில் மெசன் ஹாசர் சட்டப்படியே வெளிப்படையாகச் சுட்டுக்கொல்லப் பட்டார்.

ஜெர்மன் குடியாட்சிக் கொள்கையாளரான ராபர்ட் ப்ளம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மடமையொழிப்பு முயற்சியில் ஈடுபட்ட ஃப்ரான்ஸிஸ்கோ ஃபெரர் இயேசுநாதர் சங்க உறுப்பினர்களின் தூண்டலின் விழைவாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**" இந்தியாவிலும் இதே நிலவரந்தான் இருக்கிறது. சுயமரியாதைக்காரர்கட்கும் அவ்வாறே ஏற்பட்டால் வியப்படைய மாட்டோம். மாந்த இனத்தைக் குறைந்த அளவுக்கேனும் சிந்திக்கத் தூண்டிவிட்ட மனநிறைவுடன் சாவோம் என்பதால் எதுவாயினும் நாம் அதற்கு அணியமாக இருக்கிறோம்"**

-தோழர் பெரியார் 07.07.1929 Revolt

மிக நீண்ட கட்டுரையின் சுருக்கமான பதிவு இது. மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து பகுத்தறிவாளர்களுக்கும், ஆதிக்கச்சிந்தனை உள்ளவர்களுக்கும் இடையேயான இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருக்கிறது.

இந்தியப்பகுதிகளில் கி.பி.1ஆம் நூற்றாண்டில் தொடங்கிய திராவிடர் இன அழிப்பு இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. புத்தம், சமணம், ஆசீவகம் போன்ற வேத மத எதிர்ப்பு வாழ்க்கைமுறைகள் கி.பி.1ஆம் நூற்றாண்டிலிருந்தே கடும் நெருக்கடிகளுக்கு உள்ளாயின. இந்து இத எதிர்ப்பு இலக்கியங்களும் ஏடுகளும் ஓலைச்சுவடிகளும் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. இந்து மத எதிர்ப்புக் கருத்தாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். கழுவிலேற்றிக் கொல்லப் பட்டனர்.

புத்தருக்குப் பிறகு பார்ப்பனர்களுக்கும், இந்து மதத்திற்கும் கடும் நெருக்கடியைக் கொடுத்த தலைவரான பெரியார், தனது காலத்திலும், தமது தலைமுறையிலும் இந்த இன அழிப்பு தொடரும் என்று திடமாக நம்பினார். அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் புதிய புதிய கருத்தாளர்களையும், எழுத்தாளர்களையும், சுயசிந்தனையாளர்களையும், செயலாளர்களையும் உருவாக்கினார்.

தான் உருவாக்கிய குடி அரசு, புரட்சி, ரிவோல்ட்,பகுத்தறிவு, விடுதலை, உண்மை, மாடர்ன் ரேஷனலிஸ்ட் ஆகிய அனைத்து ஏடுகளிலும் தான் மட்டுமே எழுதிக்கொண்டிருக்கவில்லை. தன்னைப் போல பலரையும் எழுதவைத்தார். தன்முனைப்போ, தலைக்கணமோ இல்லாமல், தனது தலைமுறையில் இருந்த பெரும் எழுத்தாளர்கள், தமிழ் அறிஞர்கள், அறிவியலாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், கருத்தியலாளர்கள் என அனைவருக்கும் தளம் அமைத்துக் கொடுத்தார். அதோடு நிற்கவில்லை. தனக்குப் பிறகு அடுத்த தலைமுறைக்கும் பயன்படும் வகையில் புதிய புதிய எழுத்தாளர்களை உருவாக்கினார். பெரியாரின் ஏடுகளில் எழுதியவர்களின் பட்டியல் மிக மிக மிக நீளமானது. எமக்குத் தெரிந்த சிலரை மட்டும் பட்டியலிடுகிறோம்.

கைவல்ய சாமிகள், சந்திரசேகரப்பாவலர், ஈழத்து சிவானந்த அடிகள், சாமி சிதம்பரனார், பண்டித முத்துச்சாமி, கே.எம்.பாலசுப்பிரமணியம், மா.சிங்காரவேலர், சீனி.வேங்கடாச்சாமி, கோவை அய்யாமுத்து, கண்ணப்பர், குருசாமி,

ப.ஜீவானந்தம், முத்துச்சாமி வல்லத்தரசு, க.அ.புன்னைமுத்து, எஸ்.இராமநாதன், எம்.ஆர்.மத்திரன், நாகர்கோவில் பி.சிதம்பரம், செல்வி.ஞானம், வழக்குரைஞர் இலட்சுமிரதன், பி.ஜி, ஜி.ஆர், கிர்க், சுமதிபாய், மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி, ஜி.ஜே, செல்வி இந்திராணி, கொழும்பு டி.எம்.இப்ராஹிம், அலிஅக்பர், சு.பா.க.மொகிஹிய்தீன், கொழும்பு ஏ.எல்.முகமது தமீம், ஆர்.கே.சண்முகம், சக், சிவநாதன், எஸ்.எ .பாரதி, எ.கே.நாயர், டி.எஸ்.குஞ்சிதம், கே.சிவஞ்ஞானம், இ.சிவம், அ.மு.முகமத் காசிம், கா.அப்துல் ஹமீத், எம்.கே.எம். காதர், எ.உத்தண்ட நாடார், நய்னா ரைட்டஸ், அகஸ்த்தியா, போத்தி, பி.திரிகூடசுந்தரம், எ.ஆர். ஜெயவேலு, கே.சி.இராமன், பேரா.ஜோஷி, எஸ்.எம்.மைக்கேல், திவ்யா, இராம வர்மா தம்பன், என்.இலட்சுமணன், ஃபவ்ண்டன்பென், பாஹிலேயன், ஹர்பகவான், டி.வி.பிரதான், கே.எம்.பாலன், பி.கிருஷ்ணஅய்யர், ப்ளெய்ன் ஸ்பீக்கர், சத்தியசாது, எஸ்.சையது அஹமது, அ.இ.ரஹ்மான், டிஅப்துல் சுபஹான்,

கே.வி.ரெட்டி நாயுடு, எஸ்.வி.லிங்கம், ஈங்குர் மனுவேல், சிங்கப்பூர் தமிழவேள் கோ.சாரங்கபாணி, திருச்சி டி.எஸ்.சாம்பசிவம், மணியம்மையார், புலவர் இமயவரம்பன், சித்தார்க்காடு இராமையா, அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி இப்படி நூற்றுக்கணக் கானோர் பெரியாரின் ஏடுகளால் அங்கீகரிக்கப் பட்டுள்ளனர்.

தனது கருத்தைப் பின்பற்றும் தோழர்களின் எழுத்துக்களை மட்டுமல்ல தமக்கு எதிராக எழுதிய பி.ஆர்.பரமசிவ முதலியார், வெங்கட்டராம சாஸ்திரி, எம்.வி.வி.கே.ரெங்காச்சாரி, அறிஞர் அண்ணா போன்றவர்களின் கருத்துக்களையும் முழுமையாக வெளியிட்ட கருத்துரிமைக் காவலர் பெரியார்.

தனது இயக்கத்தின் சார்பில் வெளிவந்த ஏடுகளை மட்டுமல்லாமல், தனது இயக்கத் தோழர்கள் தனிப்பட்ட முறையில் தொடங்கி நடத்திய ஏடுகளுக்கும் தனது ஆதரவையும், விளம்பரத்தையும் கொடுத்து அதுபோன்ற ஏடுகளை வளர்க்க உதவினார். தனது குடி அரசு, பகுத்தறிவு ஏடுகளுக்குப் போட்டியாக வந்துவிடுமே? என்பது போன்ற 'சிறுமதி' அவரிடம் இருக்கவில்லை.

சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலம் முதல் தன்னுடன் நிழல்போல உடன் இருந்த மாயவரம் சி.நடராசன் என்ற தோழர் தனியாக ஒரு சிற்றிதழைத் தொடங்குகிறார். அதை அச்சிட்டு பெரியாருக்கு அனுப்பிவைத்துள்ளார். அந்த ஏட்டின் பெயர் 'வெற்றிமுரசு'. 'கட்டுப்பாடு' பற்றி மிகவும் உறுதியான கருத்துக்கொண்டவர் என்று காட்டப்படும் பெரியார், தமது அமைப்புக்குத் தொடர்பில்லாமல் வெளியான அந்த ஏட்டைப் பற்றித் தனது பகுத்தறிவு ஏட்டில் ஒரு அறிக்கை வெளியிடுகிறார்.

"மாயவரம் தோழர் சி.நடராசன் அவர்களை வெளியிடுவோராகவும் பொறுப்பாளராகவும், மாயவரம் வக்கீல் தோழர் கே.லட்சுமிகாந்தம் பி.ஏ.,பி.எல். அவர்களைக் கௌரவ ஆசிரியராகவும் கொண்டு மாயவரத்திலிருந்து வெளியாகும் 'வெற்றிமுரசு'என்னும் வாரப்பத்திரிகை நமக்கு அனுப்பப்பட்டதைக் கண்டு மகிழ்ந்தோம்.

இது 'பகுத்தறிவு'க்கு உற்ற தோழனாகவும், சுயமரியாதை சமதர்மக் கொள்கைகளுக்கு வழிகாட்டியாகவும் திகழ்வதுடன், தஞ்சை ஜில்லாவுக்கென்று தக்கதொரு பத்திரிகை இல்லாததால் அதை முன்னிட்டும் வெற்றி முரசை நாம் முழுமனதோடு வரவேற்கிறதுடன், தமிழ் மக்களையும் - சிறப்பாகத் தஞ்சை ஜில்லாவாசிகளையும் ஆதரிக்குமாறு வேண்டு கிறோம்" - பகுத்தறிவு - 26.08.1934

இதேபோல ஜோலார்பேட்டையில் இருந்து 'சமதர்மம்' என்றொரு ஏடு வெளியாகிறது. அதையும் பாராட்டி வரவேற்று 'பகுத்தறிவி'ல் எழுதினார் பெரியார்.

வரலாற்றில் எத்தனையோ பகுத்தறி வாளர்கள் படுகொலை செய்யப்பட்டாலும், தனது காலத்தில் எண்ணற்ற பகுத்தறிவு எழுத்தாளர் களையும், ஏடுகளையும் உருவாக்கியவர். மற்றவர் களையும் தன்னைப் போல 'உருவாக - உருவாக்க' வைத்தவர் பெரியார். அதுபோன்ற பெரியாரியல் நடவடிக்கைகளே தற்போதைய ஆர்.எஸ்.எஸ். கும்பல்களுக்குச் சரியான எதிர்வினையாக அமையும்.

பெரியார் இயக்கங்களை மட்டுமல்ல. அனைத்து முற்போக்கு அமைப்புகளின் பொறுப்பாளர்களுக்கும் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறோம். நரேந்திர தபோல்கர், கோவிந்த பன்சாரே, கல்பர்கி படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் அனைவரும் தங்கள் மனதளவில் - எந்தப்பற்றுமில்லாமல், எந்தச்சார்புமில்லாமல் ஒரு சுயவிமர்சனம் செய்து பாருங்கள்.

எழுத்தாளர்களை மட்டுமல்ல; கலைக் குழுவினர், கருத்தாளர்கள், செய்தியாளர்கள், சுயசிந்தனையாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், செயல்வீரர்கள் என அனைத்துத் தளங்களிலும் அடுத்த தலைமுறையை உருவாக்க நாம் முயற்சி செய்தோமா? முட்டுக்கட்டையாக இருந்தோமா? முயற்சி செய்து நடைமுறைப் படுத்தியிருந்தால் பாராட்டுக்கள். முட்டுக்கட்டையாக இருந்திருந்தால் தங்களை மாற்றிக்கொள்ள வாழ்த்துக்கள்.

# ஆபாசம்!!!



தமிழ்வாணன் பெண்ணியவாதி
பெரியாரியப் பெண்விடுதலை இயக்கம்

அட என்ன அது ஆபாசம்? இன்று என்னை சிந்திக்க தூண்டிய தோழர் நித்யாவுக்கு நன்றி. ஆபாசம் என்னும் வார்த்தை சமஸ்கிருத வார்த்தை .. இந்து மத இலக்கியங்கள் கொண்டு வந்ததே இந்தச்சொல். அதாவது, தனக்கான கட்டுப்பாடு அல்லது விதிக்கப்பட்ட நெறிமுறைகளை மீறினால் அது ஆபாசம் ஆகும்.

உதாரணத்திற்கு சிவன் காலைத்தூக்கி ஆடலாம். பார்வதி ஆடினால் அது ஆபாசம்.. விஷ்ணு காலை நீட்டி மற்றவர் முன் படுக்கலாம். இலட்சுமி படுத்தால் ஆபாசம். இது அப்டியே நம் கலாச்சாரத்திற்கு வரும்போது, இன்னும் கொஞ்சம் எக்ஸ்ட்ரா ஃபிட்டிங் சேர்த்துக்கொண்டு வந்துவிட்டது.

உண்மையில் ‘ஆபாசம் என்பதே கற்பிதம்’ தான் ஆபாசம் என்னும் வார்த்தையில் ஆணித்தரமான ஆணாதிக்கமும் ... அடக்குமுறையும் உள்ளது. அன்று முதல் இன்றுவரை பெண்ணை மய்யப்படுத்தியே ஆபாசம் என்னும் வார்த்தை கையாளப்படுகிறது உதாரணத்திற்கு ...

ஆணின் ‘நெஞ்சு கட்டாக உள்ளது’ ... இது ஆபாசமாகாது பெண்ணின் ‘மார்புகள் கட்டாக உள்ளது’ ... இது ஆபாசமாகிறது அது ஏன் ஆகிறது என்றால், பெண்ணுக்கு அடக்குமுறை உள்ளது எனவே சொல்கிறது.

ஆண் லோ ஹிப் போடுவது ஆபாசமாகத் தெரிவதில்லை. பெண் லோ ஹிப் போட்டால் ஆபாசம் ஆகிறது. என்ன காரணம்? நம் கலாச்சாரமானது, பெண்களுக்கு ஆண்களின் தோற்றத்தின் மேல் ஈர்ப்பு வராத அளவுக்குக் கட்டமைக்கப்பட்டுள்ளது. மார்பகங்களோ, இடுப்போ, முதுகோ, தொடையோ, முழங்காலோ, பெண்ணுருப்போ ஆபாசம் என சித்தரிக்கப்பட்டுள்ளதன் காரணம் - அதைப் பார்த்தால் ஆணுக்கு உணர்ச்சி வருகிறது என்கிற மாயையே.

இன்னொரு எடுத்துக்காட்டு. ஆண் எகிறிக்குதித்து ஒருவரை எட்டி உதைக்கிறார். அது ஆபாசம் ஆகவில்லை. பெண் எகிறிக்குதித்து ஒருவரை எட்டி உதைக்கிறார். அது ஆபாசம் ஆகிறது. இங்கு பெண்ணின் மார்பகங்கள் அசைவதே ஆபாசம் எனும் சித்தரிப்பு உள்ளது.



ஆண் சட்டையைக் கழட்டினால், ஆபாசம் ஆகாதது, பெண் கழட்டும் போது ஆபாசம் ஆவதாகத்தெரிவது ஏனென்றால், பெண்ணின் மார்பகங்கள் ஆணுக்கானது என நினைப்பதே.

ஒருமுறை தோழர் ஒருவரிடம் **'துப்பட்டாவைத் தூக்கிப் போடும் நிகழ்ச்சி'** நடத்தலாம் எனப் பேசியபோது பயங்கரமான விவாதம் போனது. அதெப்படி துப்பட்டாவைத் தூக்கிப் போட்டுவிட்டால், ஆண்களின் கண்கள் என் மார்பகத்தையே பார்க்குமே என்றார். நான் ஆண்களுக்கான போகப்பொருள் ஆக விரும்பவில்லை என்றார்.

உண்மையில் அவர் அப்படிச் சொன்ன பின் தான் ஆணுக்கான போகப்பொருள் ஆகிறார். ஆண்களின் கண்கள் மார்பகங்களைப் பார்க்கட்டும் அதனால் நீங்கள் போகப்பொருள் ஆவதில்லை. ஆண்களுக்காக ஒரு நிலையில் இருப்பது தான் உங்களை போகப்பொருள் ஆக்கும் என்றேன். ஆண்களுக்காகத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதும், தங்கள் தோற்றத்தைத் தயார் செய்வதுமே அவரை போகப்பொருள் ஆக்குகிறது.

உண்மையில் துப்பட்டாவைத் தூக்கிப் போட்டுவிடுவதில் ஆபாசம் இருக்கிறது என்றால், மார்பகங்கள் மெல்லிதாக உள்ளவர்கள் போகப்பொருள் ஆவதில்லையே? அவர்களை ஆபாசமானவர் எனச் சமூகம் சொல்வதில்லையே? ஒரு வேளை அதிக சதைகள் கொண்ட மார்பகங்கள் ஏன் ஆபாசம் ஆகிறது என பகுத்தறிந்தால், அது ஆணுக்கு வேண்டிய ஒன்று. அதைத் தற்காத்துக்கொள் .என்று தான் இந்தக் கலாசாரம் சொல்கிறது.

ஆபாச உடை என்பதெல்லாம் உண்மையில் இல்லவே இல்லை. ஒரு உடை ஆபாசமாவதற்குத் அடிப்படையாக 'கட்டான மார்பகத்தையும்,வளைவுள்ள உடலமைப்பையும்' நிர்ணயித்துள்ளது இச்சமூகம். டீ-சர்ட்டை மெலிந்த உடலுள்ள பெண் போடும் போது ஆபாசம் ஆகாததற்கும், குழந்தைகள் போடும்போது ஆபாசம் ஆகாததற்கும் இதுவே காரணம்.

உண்மையில் அத்தன்மைகள் என்ன தவறான தன்மைகளா? இயற்கையின் தவறா என பகுத்தாராய்ந்தால்,

ஆண் தான் வந்து நிற்கிறான். அவனின் தேவையே வந்து நிற்கிறது. பெண் தனக்கான உடைமை எனும் கருத்தியலே வந்து நிற்கிறது. இவன் பார்வையில் பெண்ணே ஆபாசப்பிறவி. இவன் எங்கும் இருக்கிறான். அவனுக்கு ஆணாதிக்கம் எனும் பெயருள்ளது. அவன்வீடு கலாச்சாரமும் மதமும்.

அதிக மார்பக - பின் இருப்பு சதைகளைக் கொண்டுள்ள தன்மை எப்படி ஆபாசம் ஆகிறது? அட ஆணுக்கான தேவை அது என்னும்போது தானே? ஆகையால், இந்த ஆபாசம் என்கிற உருவகம் முழுக்க முழுக்க ஆணுக்கானதாகத் தான் உள்ளது.

உண்மையில் ஆபாசப் பேச்சு, ஆபாசத் தோற்றம், ஆபாசப் படம் என்று ஒரு வெங்காயமும் இல்லை. ஆபாசம் என்னும் சொல்லில் இருப்பதெல்லாம் 'பெண்ணுக்கான அடக்குமுறையே'. எனவே, முடிந்த வரை **'ஆபாசம் என்கிற கருத்தியலை ஒழிப்போம்'**




கடந்த 2014 ஆம் ஆண்டு அக்டோபரில் தொடங்கி இந்த ஆண்டு செப்டம்பர் வரை காட்டாறு 12 இதழ்களை வெளியிட்டுவிட்டது. 'காட்டாறு' என்ற பெயர் திட்டமிட்டு வைக்கப்பட்டதல்ல. ஆனால் எங்களுக்குப் பொருத்தமாக இருப்பதாகவே தோன்றுகிறது. 12 இதழ்களிலும் எங்கள் மனதிற்குப் பட்டதை அப்படியே வெளியிட்டோம். மற்றவர்கள் நம்மை அப்படி நினைத்து விடுவார்களோ? இப்படி நினைத்து விடுவார்களே? என்று பிறரது மனப்போக்குகளுக்கு ஏற்ப எழுதாமல் எங்கள் நோக்கங்களை – எங்களது பாணியிலேயே வெளியிட்டு வந்தோம். அதனால் பல சங்கடங்களை ஏற்றோம். எங்களாலும் பலருக்கும் சங்கடங்கள் வந்திருக்கலாம். காட்டாற்றின் வெள்ளத்தை பயனுள்ள வகையில் மாற்றிக்கொள்ள வேண்டியது வாசகர்கள், ஆதரவாளர்கள், நண்பர்களின் கடமையாகும். அதற்கு ஒரு வழியாக **காட்டாறு இரண்டாம் ஆண்டு தொடக்க விழா மலர்** ஒன்றை அக்டோபர் 24 அன்று கோவையில் வெளியிட உள்ளோம். அதில் கடந்த இதழ்களைப் பற்றிய முழுமையான விமர்சனங்களை மட்டுமே அதிகமாக வெளியிட உள்ளோம். கருத்து, எழுத்துமுறை, வடிவமைப்புமுறை, விநியோகமுறை, காட்டாறு குழுத் தோழர்களின் அணுகுமுறை என எவையாக இருந்தாலும் எழுதி அனுப்புங்கள். இரண்டாம் ஆண்டு தொடக்க விழா மலர் விமர்சன மலராகவே மலர உள்ளது. விமர்சனங்களை மட்டுமல்லாமல் விளம்பரங்களையும் அனுப்பி உதவுங்கள்.

காட்டாறு, 1/ 810 முத்தமிழ்நகர், நத்தம் சாலை, திண்டுக்கல் – 624003, kaattaaru2014@gmail.com



# பெரியாரும் பாவ்லோ பிரையரும்

முனைவர் பூ.மணிமாறன்

பல கல்வியாளர்களைப் பற்றிப் பேசினாலும் எழுதினாலும் இருவரைத் தவிர்த்து விட்டுப் போகமுடியாது. அவர்கள் தந்தைபெரியார், பாவ்லோ பிரையர் ஆவர். காரணம் பெரியாரும் பிரையரும் ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்களுக்காகத் தங்களது இறுதிமூச்சு வரை பேசினார்கள். அதுவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக மட்டுமே பேசினார்கள். கல்வி என்பது வெறும் பாடத்தை மட்டுமே படிப்பது மட்டுமல்ல. உலகை, மக்களை, தமது சூழலை, இயற்கையை,இருத்தலை வாசிப்பதே கல்வி..

மேலும் கற்பதற்காக ஒரு ஏதுவான சூழல் உருவாக ஒரே வழியுண்டு. அது என்னவென்றால் நாம் நமது குழந்தைகளை, மதிப்பெண்களைத் தாண்டி நேசிக்கக் கற்றுக்கொள்வது மட்டுமே. அப்போதுதான் நமது வாசிப்பும் தேடலும் விரிவடையும். நமது குழந்தைகளைப் புத்தகங் களைத் தாண்டிப் படிக்கப் பழக்கவேண்டும். அப்படியான நமது தேடல் மக்களிடையே நடந்த நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வு குறித்தும் அலசுவதாக ஆராய்வதாக அமையும்.

நாம் எதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் ஏன்? எதற்கு? ஏப்படி? எனக் கேள்விக் கேட்கத் தொடங்குவோம். சரியான விடைகள் சரியான கேள்விகளில் இருந்தே விடுபடத் தொடங்குகின்றன. இத்தகைய முறைமையையே பெரியாரும், பிரையரும் பின்பற்ற அறிவுறுத்துகின்றனர்.

பாவ்லோ பிரையர் உள்ளிட்ட அனைத்து விடுதலைக் கல்வியாளர்கள் போலவே பெரியாரும்“மக்கள் அனைத்து அடிமைத் தளைகளில் இருந்தும் விடுதலை அடைவதற்கான வழிமுறை என்பது கல்வி கற்றல் வழிமுறை ஒன்று தான்” என ஆணித்தரமாக வலியுறுத்துகிறார். ஆனால் அந்தக் கல்வியானது சிந்தித்தலுக்கு எதிராக இங்கு உள்ளது. நமது நாட்டில் சிந்தனையை மறுக்கும் விதமாக கல்விமுறை கட்டமைக்கப்பட்டுள்ளது. அதனை மாற்றி யமைக்க வேண்டும் என பெரியாரும் பிரையரும் முற்படுகின்றனர். இந்தப் புள்ளியில் இருந்துதான் பெரியாரும் பிரையரும் தங்களது பணியினைத் தொடங்குகின்றனர்.

பெரியார் ஒரு முழுநேரக் கல்வியாளர் அல்ல. அவரது வாய்மொழியாகவே அவரது எட்டுவயது முதல் பதினோரு வயதிற்குள் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகாலமே பள்ளியில் ஒதுங்கி உள்ளார். ஆனாலும் அவரது படித்த காலத்தைவிட ஆசிரியரிடம் அடிவாங்கியதுதான் அதிகம். மேலும் படிப்பு வரவில்லை என பெற்றோரும் பெரியாரை பதினொரு வயதில் தொழிலில் ஈடுபடுத்தி விட்டனர். இந்தக் கல்வியைக் கற்காததன் காரணத்தினாலேயே பெரியார் உலகின் அனைத்துப் பிரச்சனை களிலும் கருத்து சொல்லத்தக்க ஆசானாக உருப்பெற்றார்.

புத்தருக்கும் பெரியாருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. என்னவென்றால் இருவருமே அலைந்து அலைந்து அறிவைப் பெற்றவர்கள். அத்தகைய அனுபவ அறிவைப் பெற்ற பெரியார் பெரும்பாலான மக்களுக்குப் பேராசிரியராக விளங்கினார். பெரியார் தனது கருத்துக்களுக்கு என்றைக்கும் இறுதி வடிவம் கொடுத்தவரல்ல.

அவர் தனது ஒவ்வொரு உரையாடலின் இறுதியிலும் தனது கருத்தை அப்படியே ஏற்கவேண்டாம் சிந்தித்து சரியெனப்பட்டால் ஏற்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இத்தகைய நிலைப்பாடு என்பது துணிச்சலின் உச்சம் எனலாம். காரணம் பெரியார் தனது கருத்தின் மீது தனது கல்வியின் மீது கொண்டிருந்த அளவற்ற தன்னம்பிக்கை, நேர்மை, கருத்து நாணயம் ஆகியவற்றை நமக்கு உணர்த்துகிறது. பெரியார், புத்தர், காந்தி, பாவ்லோ பிரையர் போன்றோர் எந்தத் துறையிலும் சிறப்பு வல்லுநர்கள் (Spcilized Resource Person) இல்லை. ஆனாலும் இவர்கள் சமூகப்பிரச்சனை சார்ந்து கருத்துச் சொல்லும் போது அந்தக்குறிப்பிட்ட துறை சார்ந்த, படித்துப் பட்டம் பெற்ற வல்லுநர்கள் வியப் படையும் வண்ணம், இவர்களைத் தவிர்க்கவியலா வகையில் அவர்களது கருத்துக்கள் அமைந்திருக்கும். இத்தகைய இவர்களின் சிறப்புநிலைக்குக் காரணம், பெரியார், புத்தர், காந்தி, பாவ்லோ பிரையர் ஆகியோரின் நேர்மையான சமூகவேலைத் திட்டமும், அத்திட்டத்தில் அவர்கள் மேற்க் கொண்ட நாணயமான அர்ப்பணிப்பும் தான் எனலாம்.

நமது மரபு ரீதியிலான கல்வி முறை - பிரிட்டிஷார் அறிமுகப்படுத்திய நவீனக் கல்விமுறை- நமது இந்திய அரசு நடைமுறைப்படுத்தி வரும் கல்விமுறை - தற்காலப் பள்ளிக்கல்விமுறை ஆகிய அனைத்திலும் பெரியார் சில முரண்பட்ட கூறுகளைக் காண்கிறார்.

1.சமூகத்தில் பெரும்பாலான மக்கள் கல்வி கற்க வாய்ப்பில்லாமல் உள்ளனர். அன்றைய காலகட்டத்தில் பெரியார் பின்வருமாறு வகைபடுத்துகிறார்: சூத்திரரில் நூற்றுக்கு தொண்ணூற்று அய்ந்து பேரும், தீண்டத்தகாரில் நூற்றுக்கு 99.75 பேரும், பெண்களில் நூற்றுக்கு 99.5 பேரும் தற்குறிகளாக உள்ளனர்.

2.படிக்க வாய்ப்புப் பெற்றவர்களாவது 'அறிவாளிகளாக இருக்கிறார்களா என்றால், ஆம் எனச் சொல்ல முடிவதில்லை.'

3.எந்தத் துறைசார்ந்த படிப்பானாலும் மூடநம்பிகையுடனேயே புகட்டப்படுகிறது.

மேற்கண்ட கூறுகளையே பெரியார் தற்காலக்கல்விமுறையின் நெருக்கடிகளாகக் காண்கிறார். இத்தகைய கல்வி நெருக்கடிகளுக்குக் காரணம் மற்றும் தீர்வாக பெரியார் "கல்வியில் மதம் கலந்திருப்பதே" மேலும் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்

"இந்தப் பிரச்சனைகளுக்கும் அடிப்படை தீண்டாதார் பள்ளிக்குச் செல்ல இயலாதது மட்டுமின்றி, பள்ளி உள்ள தெருக்களில்கூட நுழையமுடியாத நிலைக்கும், பெண்கள் படிக்க இயலாததற்க்கும் மத விசயங்களில் உள்ள முட்டுக்கட்டையே காரணம்",

"மதத்தைக் காப்பாற்றிக்கொண்டு எல்லோரும் படிக்க வேண்டும் என்பது அறியாமையேயாகும். "நமது கல்வித்திட்டத்தில் இரண்டறக்கலந்து நிற்கும் பார்ப்பன, ஆரியக் கருத்துக்களே மூடநம்பிக்கைகும் காரணம்."

"பூகோள சாஸ்திரத்தில் எம்.ஏ பட்டம் பெற்ற ஒரு உபாத்தியார், சந்திரகிரகணம், சூரியகிரகணம் பற்றிக்கேட்டால் புராணக்குப்பைகளை உமிழ்வார். பெரிய டாக்டராக இருப்பான். ஆனால் அவனே மூத்திரமும் சாணியும் சாப்பிட்டால் மோட்சத்துக்குப் போகலாம் என்று நினைப்பான். ஆகவே அறிவு வேறு மதம் வேறு என்று பிரித்துவிட வேண்டும்." என்கிறார் பெரியார்.

சரி, இப்போ நாம் பாவ்லோ பிரையர் பற்றி சில கருத்துருக்களைக் காண்போம். ஒன்று இருக்கிற சமூக அமைப்பிற்குத் தக்கவராக மனிதர்களை மாற்றுதல் அல்லது இருக்கிற ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பைக் கவிழ்த்து, முற்றிலும் மாற்றி மனிதரின் விடுதலைக்கு மட்டுமே கல்வி இருக்கமுடியும். மற்றபடி நடுநிலையான கல்வி என்று எதுவும் இல்லை என பெரியாரைப் போன்றே பிரையரும் தனது கறாரான கருத்தை முன்வைக்கிறார்.

கல்வியில் இருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது என்கிறார் பிரையர். பெரியாரும் அரசியல் அதிகாரத்தை அடையும் வழியாகக் கல்வியை வலியுறுத்துகிறார். சமத்துவம் குறித்து பிரையர் மனிதர்கள் இவ்வுலகில் சகமனிதர்களுடன் தொடர்ச்சியாக தேடல் தொடங்குவதன் விளைவே அறிவு உற்பத்தி ஆகிறது என்கிறார். கல்வி பற்றிய வங்கிக் கோட்பாட்டிலோ அறிவு என்பது அறிவாளி களால் அறிவற்றவர்களுக்கு அளிக்கப்படும் வரமாகிறது. இவ்வாறு கற்பவர் மீது அறியாமையைச் சுமத்துவது ஒடுக்குமுறைக்கு உகந்ததாகிறது. அறிவையும் கல்வியையும் தேடலாக அணுகுவது ஒழிக்கப்படுகிறது.

விடுதலைக்கல்வி என்பது மௌனப் பண்பாடில் இருந்து உடைத்துக் கொண்டு எதனையும் விமர்சனக் கண்ணோட்டத்தோடு அணுக வேண்டும் என்கிறார் பிரையர். பெரியாரும் இதனையே ஏன் எதற்கு எப்படி என கேள்வி எழுப்பவேண்டும் என்கிறார். தான் பேசும் பேச்சைக் கூட வெறும் உபதேச வடிவாகக் கொள்ளாமல் சிந்திந்தித்து பகுத்தாய்ந்து பின்னர் தன் புத்திக்குச் சரியெனப்பட்டால் மட்டுமே பெரியார் அக் கருத்தை கேட்ப்பவர் தனதாக்கிக் கொள்ளச் செல்கிறார்.

பாவ்லோ பிரையர் பற்றி நாம் பல்வேறு கட்டுரைகளில் பேசியிருக்கிறோம் இன்னும் பேச உள்ளோம். இக் கட்டுரையில் பாவ்லோ பிரையர்

மற்றும் பெரியார் பற்றி நாம் பேசக் காரணம் இருவருமே ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பேசினார்கள், செயல்பட்டார்கள். இருவருமே கல்வி மூலமான விடுதலையை வலியுறுத்தி யவர்கள். மேலும் ஒடுக்கப்பட்டோருக்கான விடுதலைக் கல்வியை உருவாக்க முனைந்தவர்கள்.

மதம் கல்வியில் அதுவும் இந்தியக்கல்வி முறையில் கலந்திருப்பதைக் கண்டு கவலை கொண்டவர் பெரியார். உலக அளவில் கல்வி முறை என்பது ஆதிக்கச்சக்திகளுக்கு உரியவையாக உள்ளதைக் கண்டு வெகுண் டெழுந்தவர் பாவ்லோ. பெரியார் சமூகம், பொருளாதாரம், கல்வி மற்றும் பண்பாட்டுத் தளங்கள் என அனைத்திலும் மாற்றுகளைத் தேடியவர். தனது கருத்துக்களே தனக்குப் பின் வரும் காலத்தில் 'பிற்போக்கானவை' என ஒதுக்கத் தக்கதாகப் போய்விடும் எனக் கூறி, முற்போக்கான மாற்றுகளை முன் மொழிந்தவர்.

பாவ்லோ பிரையர் மனிதர்களை சிந்திக்கத்தக்கவர்களாக மாற்றக்கூடிய ஆற்றல் கல்விக்கு மட்டுமே உண்டு என்றும் அதனை அனைத்து மக்களுக்குமான கல்வியாக, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்வியாக மாற்ற வேண்டும் என்ற வேட்கையுடன் மாற்றுகளை முன் மொழிந்தவர். பெரியாரின் சமூகப் பார்வையைப் போன்றே பாவ்லோ பிரையரின் பார்வையும் தேடலும் உள்ளது,

சமூகத்தின் அடிப்படையான நிறுவனங் களான ஜாதி, மதம், பொருளாதார அமைப்பு முறை, இயற்கை வளங்கள் ஆகியவை யார் வசம் உள்ளன ? என்ற தேடலைத் தொடங்கவேண்டும் என்கிறார். அது மனிதர்களை விழிப்புநிலைக்குக் கொணரும் கல்வி மூலமாக இருக்கவேண்டும் என்கிறார்.

பெரியாரும் அவரது இயக்கமும் தொடக்க நாள் முதல் இன்று வரை கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய தளங்களில் தீவிரமான நடவடிக்கைகளை மேற்க்கொண்டு வருகின்றனர்

இந்த இரு நேர்மையான கருத்து நாணயமிக்க சமூக பற்றாளர்களின் பிறந்தநாள் செப்டம்பர் மாதம் (பாவ்லோ பிரையர் 1921 முதல் 1997), (பெரியார்.1879-1973)வருகிறது. எனவே அதனை நினைவு கூறும் விதமாக சில முக்கியச் செய்திகள் மட்டுமே இங்கு தொகுக்கப் பட்டுள்ளன. இறுதியாக இரு சிந்தனையாளர் களின் கூற்றுகளோடு இக்கட்டுரையை நிறைவு செய்வோம்.

"எழுதப்படிக்க மட்டும் கற்றுக் கொடுப்பது மட்டும் கல்வி அல்ல. வெறும் தகவல் தொகுப்பாக மட்டும் மக்களை மற்றுவது கல்வியின் பணி அல்ல. மாறாக ஒட்டுமொத்த சமூகத்தின் அனைத்து அம்சங்களையும் விருப்பு வெறுப்பு இல்லாமல் விசாரணை செய்வதும் அநீதியைக் களைவதும் மாற்றுக் கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும். கல்வி என்பது வெறும் சான்றிதழ் தருவதற்கு அல்ல. மாறாக ஒட்டு மொத்த சமூகத்தின் அறிவெனும் மூலத்தின் மதிப்பை அதிகரிக்கச் செய்வதுதான். *- பாவ்லோ பிரையர்.*

"இந்த நாட்டில் இன்று கல்வி என்னும் பெயரால் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து பல்கலைக்கழகம், கல்லூரி, உயர்தரப் பள்ளி என்பதாகப் பல்லாயிரக்கணக்கான பள்ளிகளை வைத்துக் கல்வி கற்பிப்பதைவிட, பகுத்தறிவுப் பள்ளிகள் மட்டும் வைத்து 'நிர்வாணமான' சிந்தனாசக்தி தரும் படிப்பைக் கொடுத்து, மக்களை எதைப் பற்றியும், எந்தப் பற்றுமற்ற வகையில் செல்லும்வரை சிந்தித்து முடிவுக்கு வரக் கற்பிப்போமானால், நாட்டில் இன்று வீணாகும் செல்வம், அறிவு, ஊக்கம், நேரம் முதலியவை பெருமளவுக்கு மீதமாகி மக்கள் வாழ்க்கைத் தரமுயர்ந்து ஒழுக்கம், நேர்மை, நல்லெண்ணம், மனிதாபிமானம், அன்பு, பரஸ்பர உதவி முதலியவை தானாக வளர்ந்து, இவைகளுக்குக் கேடான தன்மைகள் மறைந்து எல்லா மக்களும் 'குறையற்ற செல்வத்துடன்', நிறைவுற்ற ஆயுளுடன் வாழ்வார்கள் என்பது உறுதி. *- பெரியார்.*

எனவே கல்வி என்பது எந்த ஒரு விசயத்தையும் திணிப்பது என்பதை விடுத்து, ஏற்கனவே மக்கள் மத்தியில் மதத்தின் பெயரால் கடவுளின் பெயரால், சாதியின் பெயரால், பண்பாட்டுக் கூறுகளின் பெயரால் பொதுப்புத்தியில் கட்டமைக்கப்பட்டுள்ள ஆதிக்கக் கருத்தாக்கங்களிலிருந்து ஒருவரை விடுவித்து நிர்வாணமாக்குவதே சரியான கல்வியாகும் என்கிறார்.

எத்தகைய முன்முடிவுகளும் (Prejudice) பற்றுகளுமின்றி ஒன்றை அணுகும்போது மட்டுமே ஒரு சரியான முடிவுக்கு வர முடியும். எனவே முன்முடிவுகளைத் துறந்து நிர்வாண மாக்கிக் கொள்வது கற்றலின் முதற்படி என்றார் பெரியார்.

பெரியார் கல்வியில் முக்கிய அம்சமாக கூறுகிறார்: எந்தப் பற்றுமின்றி தமக்கு எதிரில் உள்ளவற்றை நாம் எதிர்க்கொள்ள வேண்டும். எந்த ஒன்றின் அடிப்படையையும் (அதாவதுசாதி, மதம், கல்வி, பண்பாடு, மொழி) நாம் இறுக்கமாகப் பற்றிக் கொண்டு அந்த அடிப்படையிலேயே நிலையாக நின்று கொண்டு புதியனவற்றை எதிர்க்கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ இயலாது. ஏற்கெனவே உள்ளவற்றில் நமக்குள்ள பற்றுகளை விட்டொழிக்கக் கோருகிறார் பெரியார். மனிதன் பற்றற்ற நிலையில் இருந்து கொண்டுதான் எதையும் சிந்திக்க வேண்டும். வெறுக்கக் கற்றவனே வெற்றி கொள்வான்.



## நீ எனக்குப் பிட்டுப் படம் டீ ...

*நான் உனக்குப் பேய்ப்படம்...*
*நீ எனக்கு பிட்டு படம் டீ*
*என் பிட்டு படம் டீ*
*என் பிட்டு படம் டீ*
*என் பிட்டு படம் டீ...*

*அடா அடா ! என்ன ஒரு பாடல் ! கேட்கும் போது இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே !!!*

*நைட்டி போட்டிருந்தால் அந்த பெண் ஒரு பிட்டு படமாம்! அது என்ன நான் உனக்கு பேய்ப் படம், நீ எனக்கு பிட்டு படம்? ஏண்டா? உங்க அம்மா நைட்டி போட்டாக் கூட உனக்கோ, இல்ல உங்க அப்பனுக்கோ பிட்டு படம்தானா? உங்க அக்கா, தங்கை எல்லாம் கூட அவங்க கணவர்களுக்கு பிட்டு படம் தானா?*

*பெண் என்றால் என்ன ஆணுக்காக படைக்கப்பட்ட காமப்பண்டமா? பெண் என்றால் காமத்துக்குத் தானா ? ஏன் உன்னை பெற்றவள்கூடக் காமத்திற்கான பண்டம் என்று தான் நினைக்கிறாயா? ஏற்கனவே 'பொட்ட பொட்ட' னு ஒரு புறம்போக்கு பெண்களக் கேவலப்படுத்துது! ஒண்ணு 'டென்ஷன்' ன்னு விளம்பரம் பண்ணுது! நீ பொண்ணுங்க எல்லாம் பிட்டு படம்ங்குற...*

*சேனல்களில் அதிகம் ஒலிபரப்பப்படும் பாடல் இது. பெண்களை மிக மோசமாகப் பேசும்* **'த்ரிஷா இல்லனா நயன்தாரா'** *எனும் படத்தில் இடம் பெறும் இந்தப் பாடல் தடை செய்யப்பட வேண்டும்.*

*-தமிழ்வாணன் பெண்ணியவாதி*


## IIT யில் சேர முயற்சி எடுங்கள்! அறிவிப்பு வெளியாகியுள்ளது!

புவனேசுவரம், மும்பை, புதுடில்லி, சண்டிகர், கௌகாத்தி, அய்தராபாத், இந்தூர், ஜோத்பூர், காரக்பூர், கான்பூர், சென்னை, பாட்னா, ரூர்கே, ரூபார் ஆகிய 14 முக்கிய நகரங்களில் இந்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களான ஐஐடிக்கள் உள்ளன. இவற்றிலும் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்திலும் (ஐஐஎஸ்சி) கீழ்க்கண்ட பாடப் பிரிவுகளில் சேர அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பிஎச்.டி. படிப்பு, இரண்டாண்டு எம்.எஸ்சி. படிப்பு, ஒருங்கிணைந்த எம்.எஸ்சி - பிஎச்.டி, எம்.எஸ்சி .- எம்.டெக் (Integrated Ph.D. Degree Programmes, M.Sc. (Two Years), Joint M.Sc.-Ph.D., M.Sc.-Ph.D.Dual Degree, M.Sc.-M.Tech.,and other Post-Bachelor Degree Programmes) இந்தப் படிப்புகளில் சேர ஜேம் தகுதித் தேர்வில் வெற்றி பெறுவது அவசியம். Joint Admission Test for M.Sc. (JAM)

இந்த 'ஜேம்' தகுதித்தேர்வின் அடிப்படை யிலேயே மாணவர்சேர்க்கை நடத்தப்படுகிறது. இந்த உயர்கல்வி நிறுவனங்கள் தவிர, பிற கல்வி நிறுவனங்களும் இந்தத்தகுதித் தேர்வை மாணவர் சேர்க்கைக்கு கணக்கில் கொள்கின்றன. எனவே இந்தப் படிப்புகளைப் பயில விரும்பும் மாணவர்கள் 'ஜேம்' தேர்வுக்குத் தயாராவது அவசியமாகிறது. 2016-ஆம் ஆண்டுக்கான இந்தத் தேர்வை சென்னை ஐஐடி நடத்தவுள்ளது. 2016 பிப்ரவரி 7 ஆம் தேதி ஆன்லைன் முறையில் இந்தத்தேர்வு நடத்தப்பட உள்ளது. இதற்கான விண்ணப்பத்தை ஆன்லைன் மூலம் சமர்ப்பிக்க அக்டோபர் 14 ஆம் தேதி கடைசிநாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Last Date for Payment of Application Fee through e-Challan - October 10 2015 (Saturday)
Last Date for Online Application Submission and Uploading of Documents on the Website October 14 2015 (Wednesday)
Last Date for Change of examination City/Town maybe permitted,if request with a valid reason for the same is received in the office of the Chairman, JAM 2016, IIT Madras along with a Demand Draft of Rs. 500/- drawn in favour of Chairman JAM-2016, IIT Madras - October 31 2015 (Saturday)

முழுமையான தகவல்களுக்குக் கீழே உள்ள இணையதள இணைப்பில் சென்று பார்க்கவும்.
www.jam.iitm.ac.in/jam2016/



# பாலியல் கல்வி 3

## குடும்ப நலம் குடும்பக் கட்டுப்பாடு



**குடும்பக் கட்டுப்பாட்டுக்கான முறைகள் யாவை ?**

மணமான ஒவ்வொரு தம்பதியரும் கடைப்பிடிக்க பல்வேறு வகையான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் நடைமுறையில் உள்ளன. ஒவ்வொரு தம்பதியரும் தங்களுக்கு ஏற்ற ஏதாவது ஒரு முறையை பின்பற்றலாம் அவை பின் வரும் முறைகள் ஆகும்.

பாதுகாப்புக் காலம் (Safety Period Method)

ஆண் கவனம் முறை (The man Careful Method)

எளிய கருத்தடை முறை(The Elementary Precaution Method )

அணு மருந்திடல் முறை ( Spermicidal Method )

ஆண் உறை அணிதல் முறை(The sheath Method )

பெண் உறை அணிதல் முறை ( The Diaphragm Method )

ஆணுறுப்புத் தையல் முறை (The man Sterilization Method )

பெண்ணுருப்புத் தையல் முறை (The Woman Sterilization Method )

காப்பர் டி முறை ( Copper- T Method )

இவற்றில் 1) ஆண்கள் பின்பற்றும் கருத்தடை முறைகள் 2) பெண்கள் பின்பற்றும் கருத்தடை முறைகள், 3) இருவரும் சேர்ந்தே பின்பற்றும் கருத்தடை முறைகள் என இதை மூன்றாகப் பிரிக்கலாம்.

**ஆண் கவனமுறை என்றால் என்ன ?**

உடலுறவில் ஈடுபட்டுள்ள போது ஆண் சற்று கவனமாக இருந்து தனது விந்துஅணு பெண்ணுறுப்பில் சென்றடையும் நிலையில் தன் உறுப்பை பெண்ணுறுப்பிலிருந்து வெளியே எடுத்து விந்தை பெண்ணுறுப்பிணுள் செல்லாமல் தடுக்கும் முறை, ஆண் கவனமுறை எனப்படுகிறது. இம்முறையில் ஆண் கலவி நிலையில் ஈடுபட்டுள்ள போது, கவனத்துடன் இருக்கவேண்டும். சற்று கவனக்குறைவாக இருக்க நேரிட்டால் கருபிடிக்கும் நிலை உருவாகிவிடும். இம்முறையில் பெண் முழுமையான கலவி இன்பம் அடைய முடியாமல் போகலாம்.

**எளிய கருத்தடை முறை என்றால் என்ன ?**

சொல்லப்பட்டுள்ள பாதுகாப்புக் காலம் (Safty Method) மற்றும் ஆண் கவனமுறை ஆகிய இரண்டு கருத்தடை முறைகளுமே எளிய கருத்தடை முறை எனப்படுகிறது. இம்முறையை பின்பற்ற போதுமான பொது அறிவு இருந்தால் போதும். மருத்துவக் கருவிகளோ, பொருட்செலவோ இம்முறையில் இல்லை. ஆண்கவனமுறை, பாதுகாப்புக்காலம் போன்ற நேரங்களில் உடலுறவு கொள்ள அணுமருந்திடல் முறையில் ஏதாவது ஒரு எளிய முறையை பின்பற்றலாம்.

**அணுமருந்திடல் முறை (Spermicidal Method) என்றால் என்ன ?**

ஆண் விந்தணுக்களை அழிக்கக்கூடிய மருந்துவகைகள் நிறைய இருக்கின்றன. உடல் உறவுக்கு முன் பெண் உறுப்பிற்குள் இம்மாதிரி மருந்துவகைகளில் ஒன்றை வைப்பதன் மூலம் ஆண் விந்தணுக்களை பெண் சினை முட்டையுடன் சேராமல் தடுப்பதுதான் இம்முறையின் நோக்கம்.

இம்முறையில் மாத்திரைகள் தான் மிகவும் சுலபமாக கையளாக்கூடியவையாகும். அவைகளை உடலுறவுக்கு 3 அல்லது 5 நிமிடங்களுக்கு முன்பாகவே தண்ணிரில் நனைத்து பெண்ணின் பிறப்பு உறுப்பில் உள்ளே வைத்து விடவேண்டும். அதை பெண்ணுறுப்பினுள் இயல்பாக ஏற்படும் நீர் கசிவினால் கரைந்து ஒரு விதமான நுரையை உண்டாக்குகின்றன. இந்நுரை ஆண் விந்திலுள்ள

அணுக்களை அழிக்கும் தன்மை வாய்ந்தவை. இவைகளை உபயோகிக்க அவைகளுக்கு என்று தயாரிக்கப்பட்ட குழாய்கள் *(Applicators)* தேவை. மாத்திரைகளும் ஜெல்லிகளும் கீரீம்களும் கிடைக்கக்கூடிய இடங்களை மருத்துவரை அணுகி தெரிந்து கொள்ளலாம்.

இம்முறை ஒரளவிற்கே பாதுகாப்பு அளிகிறது. ஆனால் மற்ற முறைகளைக் காட்டிலும் இதில் அதிகத்தோல்வி ஏற்படலாம். இந்த மருந்துகள் பொதுவாக தீங்கு இழைப்பதில்லை. இருந்த போதிலும் சில பெண்களுக்கு இவை ஒத்துக் கொள்வதில்லை. ஜெல்லிகளையும் க்ரீம்களையும் பயன்படுத்தும் போது கவனத்துடன் சேமித்து கையாள வேண்டும். அத்துடன் அவற்றைப் பயன்படுத்தப் போதுமான ஓய்வும் அவகாசமும் தேவைப்படுகிறது. வெப்பமான காலங்களில் ஜெல்லிகள் உருகி அருவருப்பு தரத்தக்கதாக ஆகிவிடுவதால் அவற்றைப் பெண் உறையுடன் அவ்வளவாக யாரும் பயன்படுத்துவதில்லை. சில சமயங்களில் நுரை மாத்திரைகள் சரியாகக் கரையாமலும், போதுமான அளவு நேரிடும் ஆதலால் இவைகள் ஜெல்லிகளை விட அதிகத் தோல்விகளைக் கொடுக்கும்.

**ஆண் உறை அணிதல் முறை என்றால் என்ன ?**
***(The Sheath Method)***

ஆண் உறை அல்லது காண்டம் என்பது ஆண் உறுப்பின் மேல் உறை போல அணிவதற்காக மெல்லிய பலூன் வடிவ ரப்பரால் செய்யப்பட்ட ஒரு உறையாகும். இதை ஆண் பெண்ணுடன் உடல் உறவு கொள்ளும்முன் அணிந்து கொண்டால் ஆண் கரு அணு *(Spermatozoa)* நிறைந்த ஆணின் விந்தணு *(Semen)* பெண்ணின் கருப்பையினுள் *(Uterus)* செல்லாமல் இந்த உறையிலேயே தங்கிவிடும்.இம்முறையில் பயன்படுத்தப்படும் உறைகளில் துளைகள் இல்லாமலும் பயன்படுத்தும் போதும் (உடலுறவு கொள்ளும் போது) கிழியாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

அதன் நெகிழ்வுத் தன்மைக்கு ஜெல்லிகளை உபயோகிக்கலாம். ஆண் உறுப்பைப் பெண் உறுப்பிலிருந்து எடுக்கும் போது உறையை கையில் பிடித்துக் கொள்ளவெண்டும். ஜெல்லியை உறையின் உள்ளேயும் வெளியேயும் தடவும்போது உறை கிழியாமலும் பயன்படுத்து கிறவைகளுக்கு சௌகரியமாகவும் வசதி ஏற்படுகிறது. ஜெல்லியை உறையின் உள்ளே தடவுவதன் காரணமாக ஆண் விந்தணுக்களை ஜெல்லி கொன்று பாதுகாப்பு அளிக்கிறது.

**பெண் உறை அணிதல் முறை (The Diaphragm Method) என்றால் என்ன?**

ஆண் உறை *(Sheath)* எந்த நோக்கத்திற்காக ஆண்களால் பயன்படுத்தப்படுகிடுகிறதோ அதே நோக்கத்திற்காக பெண்களால் பயன்படுத்தப் படுவதற்கு என்று தயாரிக்கப்பட்ட ஒரு உறைதான் டயபரம் *(Diaphram)* அல்லது பெண் உறை என்பதாகும். இது மிருதுவான ரப்பரால் (வட்ட வடிவமாக) செய்யப்பட்டு, விளிம்பைச் சுற்றிலும் வளையக் கூடிய சுருள் கம்பியை கொண்டது. பெண் உறை, பெண்ணின் பிறப்புறுப்பு *(Vagina)* வழியின் குறுக்கே வைப்பதற்கு தகுந்தாற்போல் செய்யப்பட்டு இருக்கும்.

இது கருப்பையின் வாய்க்கும் பெண்ணின் பிறப்பு உறுப்பு வழியின் வெளிபகுதிக்கும் இடையே ரப்பர் திரை போல அமைந்திருப்பதால் உடலுறவின் போது, வெளிப்பகுதியில் சிந்தும் ஆணின் விந்தணு பெண் கருமுட்டையை *( Ovum - Female Egg)*அணுக இயலாததால் கர்ப்பம் தடை செய்யப்படுகிறது. ஜெல்லிப் பசையுடன் வழக்கமாக இம்முறை மேற்கொள்ளப்பட்டால் நெகிழ்வுத் தன்மை கிடைப்பதுடன், கருத்தடை முறையும் வலுவடைகிறது. ஆணுறை போல அல்லாமல் இந்த பெண்ணுறையில் பல அளவுகள் இருப்பதால் மருத்துவரைக் கலந்தாலோசித்துப் பயன்படுத்துவது நலம். மேலும் மருத்துவர் அது குறித்தான பயன்படுத்தும் முறையையும் விளக்குவர்.

**.ஆணுறுப்பு தையல் முறை என்றால் என்ன?**

(The man Sterilization Method)

மேலே சொல்லப்பட்ட வழிகள் எல்லாம் தற்காலிக முறைகளாகும். ஆணுறுப்புத்தையல் முறையிலே, விறையிலிருந்து வெளிவரும் ஆண் விந்தணு இந்திரியத்தோடு (செமன்) கலந்து கொள்ள முடியாதபடி ஆண் கருவணுக் குழாய் நிரந்தரமாகத் துண்டிக்கப்படுகிறது. இதனால் இந்திரியத்தில் வெள்ளை திரவத்தில் ஆண் விந்தணு இல்லாதபடி செய்யப்படுவதால் இது ஒரு நிரந்தரமான முறையாகும்.

இம்முறையால் ஆணுக்கு ஆண் விந்தணுக் குழாயைத் துண்டிக்கும் *(Vasectomy)* அறுவை சிகிச்சை *(Operation)* செய்யப்படுகிறது. அதாவது விரைப்பையில் இருபக்கத்திலும் விரைகளுக்கு சற்று மேலே அறை அங்குல நீள திறப்பு செய்யப்பட்டு ஆண் விந்தணுக் குழாய் *(Spermatic Cord Orvas)* வெளியே இழுக்கப்பட்டு துண்டிக்கப் படுகிறது. மயக்க மருந்து கொடுக்காமலேயே அந்த இடத்தில் மட்டும் வலி தெரியாமல் இருக்க

மருந்து தடவி பதினைந்து அல்லது இருபது நிமிடங்களில் இந்த அறுவைச் சிகிச்சை செய்துவிட முடியும்.

இந்த முறையில் அறுவைச் சிகிச்சை செய்த பிறகும் முதல் ஆறு வாரங்கள் வரை இந்திரியத்தில் சில ஆண் விந்தணுக்கள் இருக்க கூடுமாதலால் அதற்குப் பின்னர்தான் இம் முறை பதுகாப்பு அளிக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சைக்கு பிறகு அச்சம் தரும் பின் விளைவுகள் எதுவும் ஏற்படுவது இல்லை. பிள்ளை பெறுவதால் உயிர் ஆபத்திற்கு உட்படக்கூடிய நோயுற்ற பெண்களின் கணவர்களுக்கு இது சிறந்த முறையாகும்.

**பெண்ணுறுப்பு தையல் முறை என்றால் என்ன?**

(The Woman Sterilization Method)

ஆணுறுப்புத் தையல்முறை போன்றதே இம்முறையும் எப்படி ஆண் விந்தணு இந்திரியத்தோடு கலக்காமல் செய்யபடுகிறதோ அதே போல் இந்த முரையில் பெண் சினை முட்டை கருப்பையினுள்ளே செல்லாமல் தடுக்கப்படுகிறது.இது பிரசவமான 24மணி நேரத்திற்குள் செய்துவிடுவது நல்லது. தொப்புளுக்குக் கீழே 2 அங்குலத்திற்கு அறுத்து அதன் மூலம் இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

இது மிகச் சாதாரண அறுவைச் சிகிச்சை 10 நிமிடங்களில் செய்து விட முடியும்,இந்த அறுவைச்சிகிச்சை மூலம் பெண் கருமுட்டையின் (வழியான)கருப்பைக்குழாயின் மத்திய பாகத்தில் சுமார் ஒரு அங்குலம் அகற்றப்பட்டுவிடுகிறது. ஒரு வார ஓய்வுக்குப் பின்பு தையல் பிரிக்கப்பட்ட பின்பு வீடு திரும்பிவிடலாம்.இதனால் மாதவிலக்கு பாதிக்கப்படுவதில்லை.எதிர்பாராத நிலைகளை கருத்தில் கொண்டு கர்ப்பத்தடை அறுவை சிகிச்சையை முறித்து மீண்டும் கர்ப்பமுண்டாகும் சாத்தியம் இந்த நவீன முறையில் எளிதாகிறது. ஆணுறுப்பு, பெண்ணுறுப்புத்தையல் முறைகளே தொடர்ந்த பயன் தருபவை ஆகும். மற்றவை தற்காலிக முறைகளே ஆகும்.

**லேப்ராஸ் கோப்பிக் - கருத்தடை சிகிச்சை முறை என்றால் என்ன?**

இது குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளில் ஒன்று. லேப்ராஸ்கோப் என்பது வயிற்றில் உள்ள உறுப்புக்களைப் பார்க்க உதவும் ஒரு கருவியாகும்.இக்கருவியின் உதவியுடன் பெண்ணின் வயிற்றுப்பகுதி சோதிக்கப்படுகிறது. அச்சோதனையில் அண்டகோசத்திலிருந்து கருப்பைக்கு வரும் ஃபளோப்பியன் குழாய் துண்டிக்கப்படுகிறது. இதன் காரணமாக கரு முட்டை அண்ட கோசத்திலிருந்து வெளிப்பட்டாலும் கருப்பையை அடையாது. எனவே கருத்தரிக்க வாய்ப்பு இல்லாமல் போகிறது. மிகவும் எளிமையான கருத்தடை அறுவை சிகிச்சை ஆகும்.சிறந்த மருத்தவர்களை கொண்டு இதனை செய்து கொள்ள வேண்டும்.

**காப்பர்-டி என்று சொல்லப்படும் குடும்பக் கட்டுப்பாட்டு முறை என்றால் என்ன?**

காப்பர்-டி என்பது தாமிரத்தால் ஆன Tவடிவ சிறிய உலோகத்தை ஒரு நூலிழையில் இணைத்து பெண்ணின் கருப்பையில் மருத்து வர்கள் செலுத்தி அதன் வாயை அடைத்து விடுவார்கள். பொதுவாக கருப்பையில் வேற்றுப் பொருள் இருக்கும் போது கருத்தரிக்க வாய்ப்புக் கிடையாது.இது ஒரு தற்காலிகமான முறை ஆகும்.

**குடம்பக் கட்டுப்பாடு என்பது பாலியல் உணர்வுகளை குறைக்குமா?**

குடுப்பக்கட்டுப்பாடு என்பது விந்து அல்லது சினைமுட்டை செல்லும் வழியை அடைப்பது ஆகும். இது பாலியல் விருப்பம் அல்லது உணர்வுடன் தொடர்பு உள்ளது கிடையாது. பாலியல் உணர்வு என்பது உடலில் பசி, தாகம் இவற்றைத் தூண்டும் சுரப்பிகளின் செயல் போல, சுரப்பிகளின் தூண்டும் செயல்ஆகும். குடும்பக் கட்டுப்பாடு என்பது பாலியல் உணர்வினால் வெளியாகும் விந்தணு மற்றும் கருமுட்டையை ஒன்றுடன் ஒன்று கலந்து கருத்தரிப்பதை தடுக்கும் செயலாகும். எனவே குடும்பக்கட்டுப்பாடு பாலியல் உணர்வைக் குறைக்காது.

**பாலியல் தொடர்பான குடும்பப் பிரச்சனை என்ன?**

பாலியல் தொடர்பான குடும்பப் பிரச்சனைகளை மூன்று விதமாக பிரிக்கலாம். 1.புதிதாகத் திருமணமானவர்களுக்குள்ள பிரச்சனைகள் 2.போதுமான தனி இடம் இன்மை(lack of privacy) 3.இதரப் பிரச்சனைகள்.

**புதிதாக திருமணமானவர்களுக்கான பிரச்சனைகள்;-**

இந்தச் சமூகத்தில் திருமணங்கள் பெரும்பாலும் பெற்றோர்கள் பார்த்து நிச்சயிக்கும் திருமணங்களே ஆகும். இதனால் முன் பின் அறிமுகம் இல்லாத இருவர் திருமணச்சடங்கின்போது கணவன், மனைவியாக அறிமுகம் ஆகி, முதல்இரவு என்ற பெயரில் தனியறையில் சந்திக்கின்றார்கள். பாலியல் உடலுறவு என்பது சம உரிமை அடிப்படையில் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நிதானத்துடன் ஈடுபடவேண்டிய ஒன்றாகும்.

இதில் பாலியல் பற்றிய போதுமான அறிவுஇன்றி, ஒருவரைப்பற்றிய ஒருவர் புரிதலின்றி நிதானம்தவறி ஈடுபடும்போது கசப்பான அனுபவம் தோன்றி விடுகிறது. முதலிரவில் ஆண்மையுடன் நடந்து கொள்வதாக நினைத்துக்கொண்டு ஆண், பெண்ணிடம் காட்டுமிராண்டித்தனமாக உடல் உறவு கொள்ள முயற்சிக்க - வெறுப்புற்ற மனைவி விவாகரத்து பெற்ற நிகழ்ச்சிகளும் உண்டு. அதேபோல் முதல்உறவு உடலுறவின் போது (கன்னிச்சவ்வு கிழிந்திருந்தால்) மனைவியை ஏற்கனவே பாலுறவு அனுபவித்தவள் நடத்தை கெட்டவள் என்று தவறாக எண்ணி கணவன் விவாகரத்து பெற்ற நிகழ்ச்சிகளும் உண்டு. இப்படி விவாகரத்து வரை செல்லாமல் மனதுக்குள் புழுங்கிக்கொண்டே கணவன் மனைவியாக வாழ்ந்து கொண்டு இருப்பவர்களும் இருக்கின்றார்கள்.

**போதுமான தனி இடம் இல்லாததால் ஏற்படும் பிரச்சனைகள்:-**

கூட்டுக் குடும்பங்களில் கணவன், மனைவி ஆகிய இருவருக்கிடையே உடல் உறவிற்கென்று தனியிடம் எதுவும் ஒதுக்கப்படுவதோ, கிடைப்பதோ பெரும்பாலும் இல்லை. புதிதாய்த் திருமணம் ஆனவர்கள் முதல் குழந்தை பிறக்கும் வரை தனியான இடத்தில் சேர்ந்து தூங்குகிறார்கள். இவ்வாறு சேர்ந்து தூங்குவது என்பது உடல் உறவை மட்டும் மையமாகக் கொண்டது அல்ல. மாறாக, தமது அன்றாட நிகழ்வுகளை, பிரச்சனைகளை, உணர்வுகளைப் பரிமாறி கணவன் - மனைவி நெருக்கத்தை வலிமைப்படுத்தும் வாய்ப்பாகும். முதல் குழந்தை பிறக்கும்வரை தான் பெரும்பாலான கணவன் மனைவிகளுக்கு அவ்வாய்ப்பு கிடைக்கிறது. முதல் குழந்தை பிறந்து ஓரளவு விவரம் தெரிய வந்த பின் (அதாவது சுமார் 5 வயது) தனி இடத்தில் உடல் உறவு கொள்ளும் வாய்ப்பை பெரும்பாலான கணவன் மனைவிகள் இழந்து விடுகிறார்கள்.

அவர்கள் வாழ்நாள் முழுவதும் பாலுறவிற்குத் தனிஇடம் அமையும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து வாழும் அவல நிலைக்குள்ளாகிறார்கள். இதனால் கணவன் மனைவிக்கிடையேயான பாலியல் தேவைகள் நிறைவு செய்யப்படாததுடன், அவர்களுக்குள் தனிமையில் சுதந்திரமான கருத்துப்பரிமாற்ற வாய்ப்பும் இல்லாமல் போய் விடுகிறது. இந்தப் புழுக்கங்கள் அவர்களது குடும்ப வாழ்வில் பல்வேறு பிரச்சனைகளாக வடிவெடுக்கிறது. இதில் கூட்டுக்குடும்பங்களில் ஒரு கணவன் - மனைவி இன்னொரு கணவன் - மனைவியோடு ஒப்பிட்டுப் பார்க்கும் சிக்கல்களும் எழுகிறது.

பொதுவாக இச்சமுதாயத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள வயதான கணவன் - மனைவியிடையே சண்டை, சச்சரவுகள் குழப்பங்கள் ஏற்படுகின்றன. இக்குழப்பங்கள் அவர்கள் இருக்கும் குடும்பங்களிலும் பரவி அக்குடும்பத்திற்கும் பல துன்பங்களை ஏற்படுத்துகின்றது. இதற்கான காரணம் என்னவெனில், நடைமுறையில் ஒவ்வொரு குடும்பத்திலும் வயதான கணவன் - மனைவியர் தனியறையில் சேர்ந்து படுத்துறங்கும் சமூகச் சூழ்நிலை கிடையாது. கூட்டுக் குடும்பம் மற்றும் குறைவான இட வசதி போன்ற காரணங்களால் அவர்கள் இடுவரும் சேர்ந்து உறங்குவது முடியாத ஒன்றாகிறது. அப்படியே இருவரும் சேர்ந்து உறங்குவது கவுரவக்குறைச்சல் அல்லது கேவலம் என சமூகத்தில் பேசப்படுகிறது.

பாலியல் நோக்கத்திற்காக மட்டுமல்லாது வயதான கணவன் மனைவியர் மனம் விட்டுப்பேசி ஒன்றாக வாழவும், அவர்கள் குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படாமல் செயல்படவும் அவர்களுக்கு தனியறை அவசியமாகிறது. இதன் மூலம் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகள் பெரும்பாலும் குறையும்.

**இதர பிரச்சனைகள்:**

சம உரிமை அடிப்படையில் சுதந்திரமாகத் தனது பாலியல் தேவைகளையும், தனது மனைவியின் பாலியல் தேவைகளையும் வெளிப்படுத்தி பாலியல் உடல் உறவு கொள்வதை - பிற்போக்கான சமூக ஒழுக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில்???? இழிவாகக் கருதும் கணவர்களும் உண்டு. இதில் பாலியல் தேவைகள் சரியாக நிறைவு செய்யப்படாத கணவன்மார்கள் சிலர் சுதந்திரமாக தனது பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வழக்கமான திருமணமுறை கடந்து, இரண்டாம் உறவுகளை வைத்துக் கொள்கிறார்கள்.

அதுபோன்ற இரண்டாம் உறவு என்ற இடத்திற்கு வரும் பெண்களிடமிருந்து பெறும் பாலியல் இன்பத்திற்கு ஏற்ப, அவனது மனைவியும் பிள்ளைகளும் புறக்கணிக்கப் படுவதும் உண்டு. இதே போல் பாலியல் தேவைகள் நிறைவுறாத மனைவி இரகசியமாக வேறு ஆண்களுடன் பாலியல் உறவு வைத்துக் கொள்வதும் உண்டு. இது பொதுவாக பல்வேறு குடும்பங்களிலும் பரவலாக நடந்தாலும், இந்த இரகசியம் வெளிப்படும் போது கொலை, தற்கொலை போன்ற வன்முறைகள் நடைபெறு கின்றன. ஆனால் பார்ப்பனக் குடும்பங்களில் இது பெரிய விசயமாக எடுத்துக் கொள்ளப்படுவ தில்லை, அப்படியே எடுத்துக் கொண்டாலும் அது இரகசியமாக காப்பாற்றப்பட்டுவிடும்

- தொடரும்

லிவிங் ஸ்மைல் வித்யா
மதிப்பிற்குரிய மங்கை
கிளாடி ஏஞ்சல்

# சலுகைகள் வேண்டாம்! உரிமைகளைப் பெறுவோம்!

*நண்பர்களே,*

இந்தியச் சுதந்திர நாட்டின் பிரஜைகளான நாங்கள் எந்தவொரு சராசரி இந்தியக் குடிமக்களுக்கும் பொருந்தும் சமூக, பொருளாதார உரிமையை (இதுவரைக்கும் தரமறுத்து வந்ததை) இனியாவது தந்து இந்தியா தனது பிழையைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்றே கேட்கிறோம். இதற்காகத் தொடர்ந்து பல வருடங்களாக, எழுத்திலும், செயலிலும் போராடியும் வருகிறோம். சில வாரங்களுக்கு முன்பு கூட கல்வி-வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு வேண்டும் என்று நாங்கள் போராடியது தங்களுக்குத் தெரிந்திருக்கும்.

அதனைத் தொடர்ந்து சட்டமன்றக் கூட்டத்தொடரில் எமது கோரிக்கைகள் பேசப்பட வேண்டுமென ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை நேரில் சந்திக்க முயன்று அது நடக்காத பட்சத்தில், பிற கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களை நேரில் சந்தித்து எமது கோரிக்கைகளை வைத்தோம்.

அதன் பயனாக, கடந்த 31.08.2015 திங்கள் அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் திருநர்களுக்கான கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாகவும் இலவச வீடுகள் வழங்குவது தொடர்பாகவும் திமுக சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. லீலாவதி அவர்கள் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் பா.வளர்மதி அவர்கள், “இந்தியாவில் முதல்முறையாக தமிழகத்தில் 40 வயதுக்கு மேற்பட்ட திருநங்கைகளுக்கு மாதம் ரூபாய் 1000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது என்றும், தமிழக அரசு 2 திருநங்கைகளுக்கு அரசுவேலை வாய்ப்பு வழங்கியுள்ளது” என்றும் கூறியுள்ளார்.

40 வயது வரை பாலியல் தொழிலோ, பிச்சையெடுத்தோ வாழ்ந்துவிட்டு பிறகு மாதம் 1000 ரூபாய் தருவதற்குப் பதிலாக, எங்களுக்குரிய கல்வி வேலைவாய்ப்பினை முறையாகப்பெற ஆவண செய்து, எமக்கும் சமூக, பொருளாதாரப் பாதுகாப்பினைத் தரவேண்டுமென்பதே எமது கோரிக்கை..

மேலும், ஏதோ இரண்டு திருநங்கைகளுக்கு வழங்கப்பட்ட பணிநிரந்தரமற்ற ஒப்பந்த ஊழியத்தை (அதுவும், தனிநபர் போராட்டத்தின் பயனால் கிடைத்தது) திரித்துப் பேசுவது - சலுகைகளோடு ஓய்ந்துவிடுங்கள் உரிமைகளை எதிர்பார்க்காதீர்கள் எனச் சொல்வது போல உள்ளது.

அரசாலும், தொண்டு நிறுவனங்களாலும், கைவிடப்பட்ட நிலையில், பொதுமக்களான உங்களை நாடி வருகிறோம். எமது கோரிக்கை நியாயமானதா? இல்லையா? என்பதைப் பொதுமக்களிடமும், மாவட்ட ஆட்சியாளரிடமும் நாளை முதல் தொடர்நூதன போராட்டமாக நடத்த உள்ளோம்.

இந்தியா எங்களை குடிமகள்களாகப் பார்க்காமல் இருக்கலாம். ஆனால் நாங்கள் நிச்சயம் உங்களின் சகோதரிகளே.! எங்களின் இத்தொடர் போராட்டத்திற்கு பெண்கள் அமைப்புகள், தலித் அமைப்புகள், மாணவர்கள் அமைப்புகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் நேரடியாக வந்து ஆதரவு தரவேண்டும்.

மேலும், பன்னாட்டு நிதி ஏதுமின்றி இயங்கும் எமக்கு குறைந்தபட்சம் எமது பயண செலவுகள், உணவு மற்றும் பிற செலவுகளுக்கு வாய்ப்புள்ள தோழமைகள் பொருளாதார உதவி தந்து உதவுமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

thirunangai202@gmail.com,
http://facebook.com/angelgladdy





# நிகழ்கால சூழலும் சாதிய வன்கொடுமைகளும்

**வீ.பிரபாகரன்,**
தமிழ் இளைஞர்கள்
மாணவர்கள் கூட்டமைப்பு

**'நிகழ்காலச் சூழலும் சாதிய வன்கொடுமைகளும்' என்ற தலைப்பில் தமிழ்நாடு மாணவர்கழகம் சென்னையில் ஒரு கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்திருந்தது. தி.வி.க பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தோழர் வே.மதிமாறன் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்புரை ஆற்றினர். தமிழ் இளைஞர்கள் மாணவர்கள் கூட்டமைப்பு சார்பில் இக்கருத்தரங்கில் பங்கேற்ற தோழர் பிரபாகரன் அவர்களின் உரை.**

நிகழ்கால சூழலும் சாதிய வன்கொடுமைகளும் என்கின்ற பொழுது நிகழ்காலம் எவ்வாறாக இருக்கிறது அல்லது எப்படியான சமூக சூழலில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் முதலில் பார்க்கவேண்டும்..

*1. சாதி ஒழிப்பு தான் எங்கள் கொள்கை. இறுதிவரை சாதியை ஒழிக்க நான் பாடுபடுவேன். ஆனால் தம்பி எதார்த்த உண்மை என்னன்னா சாதியெல்லாம் ஒழிக்க முடியாதுப்பா'ன்னு,* முற்போக்கு பேசும் நம்ம தோழர்களே நம்பிக்கை இழந்து பேசும் அளவிற்கு இந்தச் சமூகத்தில் சாதியம் வேரூன்றிக் கிடக்கும் ஒரு வேதனையான சூழலில் தான் நாம் இப்பொழுது வாழ்கிறோம்.

*2. சாதியெல்லாம் இப்போ யார் சார் பாக்குறா? அதெல்லாம் அந்தக் காலம்!* என்று வெறும் வாய்வார்த்தையாகப் பேசிக்கொண்டு குழந்தைக்குப் பெயர் வைப்பது தொடங்கி, பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்ப்பது வரை சாதியை அப்படியே பாதுகாத்து தனது அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் ஒரு மோசமான நிலையில் தான் நாம் தற்பொழுது வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்.

*3. மாவட்டந்தோறும் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி கல்வியில், சமூக அங்கீகாரத்தில் பின்தங்கிய சமூகத்திற்கு இடஒதுக்கீட்டைச் சரியாகக் கொண்டுப்போய் சேர்ப்பதற்குப் பதிலாக,*

தொகுதி தோறும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி எந்த தொகுதியில் எந்த சாதிக்காரன் *அதிகமா இருக்கான்? எந்த சாதிக்கார Candidate ஆக போட்டா நம்ம கட்சி ஜெயிக்கும்ன்னு* அரசியல் கட்சிகள் சாதிய வெச்சி தேர்தல் Calculation போட்டுக்கொண்டிருக்கும் ஒரு ஆபத்தான கட்டத்தில் தான் நாம் இப்பொழுது நிற்கிறோம்.

இப்பொழுது சமீபக்காலமாக அதிகரித்து வரும் இந்த சாதியப் படுகொலைகள் எல்லாம் ஏதோ இன்னைக்கு நேத்திக்கி தொடங்கி வைக்கப்பட்டதல்ல.

"கீழ்சாதிக்காரன் படிக்க கூடாது" என்று சொல்லி நமது ஏகலைவனின் கட்டைவிரலை வெட்டியவர்கள் தான், தவம் செய்த நமது சம்பூகனை வெட்டிக்கொன்றவர்கள் தான்

"நீ கீழ்சாதி, கடவுளிடம் நீ நெருங்கக் கூடாது, கடவுளை இப்படியே வழிபடக்கூடாது" என்று நந்தனாரை மோட்சம் அனுப்புவதாக கூறி மோசம் செய்து கொன்றவர்கள் தான்.

"மேல்சாதிப் பெண்ணைக் காதலித்ததற்காக இன்று நமது இளவரசனையும், கோகுல் ராஜையும் கொலை செய்யக் காரணமாக இருந்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் இது போன்ற சாதிய வன்கொடுமைகள் நடைபெருவதற்கான காரணம், மக்களிடையே வர்ணப் பாகுபாட்டினை நிறுவ வேண்டும் என்ற நோக்கத்துடன் இருந்தது. ஆனால் இப்பொழுது நடந்து வரும் சாதிய வன்கொடுமை களுக்கான காரணமோ இன்னும் ஒரு படி மேலே சென்று, இந்தச் சமூகத்தில் ஏற்கனவே நிலவி வரும் வர்ணப் பாகுப்பாடு + வர்க்கப் பகுப்பாடு ஆகிய இவை இரண்டும் அப்படியே பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக சாதியக் கொலைகளும் சாதியக் கலவரங்களும் ஆங்காங்கே திட்டமிட்டு நடத்தப்படுகிறது.

தற்பொழுது நடந்துவரும் சாதிய வன்கொடுமைகளாலும் அதன் விளைவாக எழும் சாதிக் கலவரங்களாலும் யார் பயனடைகிறார்கள் என்று பார்ப்போம்.

*1.ஏகாதிபத்திய அரச அதிகார வர்க்கம்,*

*2.சாதிய சக்திகள் (சாதிய கட்சிகள், சாதிய அமைப்புகள்)*

### அரசு அதிகார வர்க்கம்

இந்த மக்களின் ஒன்றுபட்ட போராட்டம் நமக்கெதிராகத் திரும்பிவிடக்கூடாது என்ற காரணத்திற்காகவே திட்டமிட்டு மக்களைப் பிரித்தாளும் யுக்தியை இந்தச் சாதிய மோதல்கள் மூலம் மக்களைப் பிளவுபடுத்துவதற்காக இந்த அரசு அதிகார வர்க்கம் தொடர்ந்து சாதியத்தை ஊக்குவித்து வருகிறது. தமிழ்நாட்டில் ஒரு முற்போக்குச் சிந்தனையுடன் அல்லது ஒரு நல்ல மக்களுக்கான கொள்கையுடன் அரசியல் கட்சி துவங்குகிறீர்கள் என்றால் அதற்கு எப்படியெல்லாம் தடை போடவேண்டுமோ அனைத்து வழியிலும் அதை முடக்குவார்கள்.

*ஆனால் நீங்கள் ஒரு சாதிக் கட்சி துவங்குவதாக இருந்தால் தங்கு தடையின்றி அனுமதி கிடைக்கும். அரசாங்கம் சாதிக் கட்சிகளை ஊக்குவிப்பதற்கான முக்கிய காரணமே இந்த மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியே.*

### சாதிய சக்திகள்

*தங்களுடைய சுயநலத்திற்காகவும் அரசியல் இலாபதிற்காகவும் மக்களைக் கூறுபோடும் பிழைப்புவாதத்தையே இந்தச் சாதியவாதிகள் பிரதானமாக கொண்டிருக்கிறார்கள்.*

*சாதியச் சிந்தனையை மனதில் வைத்துக்கொண்டு வெளியில் மனிதநேய பற்றாளர்போல இலங்கையில் நடந்த இனப்படுகொலையை நான் கண்டிக்கிறேன் என்று வேடம் போடும் இவர்களை என்ன என்று சொல்வது.*

*இராஜபக்சே அடுத்த இனத்தைத்தான் கொலை செய்தான். ஒரே சொந்த இனத்து மக்களிடேயே முரணை வளர்த்து மக்களை கொன்றுகுவிக்கக் காரணமான இவர்கள் இராஜபக்சேவை விடக் கொடியவர்களாகவே பார்க்கபடவேண்டியவர்கள்.*

*இதுபோன்ற சாதியத் துண்டுதல்கள் திட்டமிட்டு நம்மீது நடத்தப்பட்டு வருகிறது என்ற போதிலும் இதனைத் திட்டமிட்டு எதிர்கொள்ள நம்மிடம் ஒரு கட்டமைக்கப்பட்ட ஒரு Institution நிறுவனம் இல்லாததும், ஏற்கனவே இருந்த நமக்கான Institution இப்பொழுது Institution ஆக இல்லாதது தான் இந்த பின்னடைவிற்கும் அடுத்து நிகழ இருக்கும் பேரழிவிற்கும் அடிப்படைக் காரணம்.*

RSS அடுத்த ஐந்து ஆண்டுத் திட்டம் என்று புத்தகம் அச்சடித்து தனது ஊழியர்களுக்கு செயல்திட்டம் கொடுத்து நாசவேலைகளை செய்கிறார்கள். நாமோ ஒவ்வொரு போராட்டமாக எதிரியின் நிகழ்ச்சிநிரலுக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறோம்.

*எனவே தோழர்களே! எதிரியின் செயல்திட்டத்திற்குப் பின்னால் ஓடுவதை நிறுத்திவிட்டு, நாம் மீண்டும் நமக்கான நிகழ்ச்சிநிரலை உருவாக்கிச் செயல்பட வேண்டும். நாம் மீண்டும் சாதி பேதத்தைத் தகர்த்தெறிய அதன் அஸ்திவாரத்தை அசைக்க வேண்டும்.*

நான் 'மீண்டும்' என்று சொல்வதற்கு காரணம் பெரியார் அதைச் சரியாகச் செய்தார். போராட்டச் சூழலையும், போரட்டங்களையும் – அதன் கோரிக்கை யினையும் அவரே தீர்மானித்தார். அவரின் போராட்டங்களும், மக்கள் பிரச்சாரங்களும் எதிரியை நிலைக்குலைய செய்தது.

*சாதி ஒழிப்பினை அடிப்படையாக வைத்துப் போராடிய அவர் அதன் அஸ்திவாரமான பார்ப்பனியத்தை அசைத்து வருனாசிரமக் கட்டுமானத்தை உலுக்கிக் காட்டினார்.*

*இந்தச் சாதிய வருனாசிரமக் கட்டமைப்பைப் பொறுத்தவரை பார்ப்பனியம் மிகவும் தெளிவாகக் கட்டமைத்திருக்கிறது. இந்த இரண்டு சாதி சமம், அந்த நாலு சாதி சமம் என்று எங்கும் இல்லை. மாறாக இந்தச் சாதிக்குக் கீழ் இவர்கள், இவர்களுக்குக் கீழ் அவர்கள் என்று ஒவ்வொரு சாதியாக ஒவ்வொரு உட்சாதி பிரிவாக ஒன்றன் கீழ் ஒன்றாக ஒரு படிக்கட்டினைப்போல் அடிக்கியிருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.*

ஒரு சாதி, இன்னொரு சாதியை ஒடுக்கும்போது அந்த வலியினை அதற்கு கீழுள்ள சாதியின் மீது காட்டும் தன்மையே நிலவுகிறது. ஒரு பொழுதும் மேலிருக்கும் சாதி பாதிப்படையாமல் பார்த்துக் கொள்ளும் இந்த சாதியப் படிகட்டின் உச்சியில் மக்கள் தொகையில் 3 சதவிகிதமே உள்ள பார்ப்பனர்கள் அமர்ந்துகொண்டு மற்றவர்களை அதற்கும் குறைந்த சதவிதத்தில் சாதியென்ற பெயரில் கூறுபோட்டு இத்தனை ஆண்டுகாலம் நம்மை ஆண்டுக்கொண்டிருக்கின்றனர்.

எனவே நம் முன் இருக்கும் சாதிஒழிப்புச் சவாலினை நாம் எதிர்க்கொள்ள பெரியாரின் அணுகுமுறையே இப்பொழுது தேவைப்படுகிறது. அதற்கு சிறந்த உதாரணம் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் முடிகளே ஆகும்.

*அதிமுக: 37, பாமக: 1, பாஜக:1. கன்னியாகுமரியில் ஜெயித்தது மதம், தர்மபுரியில் ஜெயித்தது சாதி, 37 தொகுதிகளில் அதிமுக வெற்றிபெற்று இருப்பது என்பது மக்களிடம் போலியான ஒரு சூழலை ஏற்படுத்தி, எதார்த்ததிற்கு எதிரான மாயையில் மக்களை ஏமாறச்செய்து, தமிழ்நாட்டில் ஜனநாயகம் தோற்றுப் பணநாயகம் வெற்றி பெற்று, நவீன ஏகாதிபத்திய சர்வாதிகாரம் வென்றது என்று கூறலாம்.*

*ஆனால் நாமெல்லாம் கடுமையாக எதிர்த்துப் போராடும் இந்த ஏகாதிபத்திய சர்வதிகார அரசாங்கமே, இந்தத் தேர்தலில் இரண்டு இடத்தில் மதத்திடமும், சாதியத்திடமும் தோற்றிருக்கிறது என்று சொன்னால் எது மிகவும் மோசமானது, நாம் எதை முதலில் தீவிரமாக எதிர்க்க வேண்டும் என்பதனை இது உணர்த்துகிறது.*




**பூமணி**

36 வயதினிலே படம் பற்றிய நமது பார்வை மிகவும் தாமதமாக வந்தாலும், கண்டிப்பாகப் பதிவு செய்யப்பட வேண்டிய படம் என்பதால் தற்போது எழுதுகிறோம்.

தமிழ்த் திரைஉலகில் அத்திபூத்தாற்போல பெண்களை மையப்படுத்திய படங்கள் சிலவே வருகின்றன. அந்த வரிசையில் 36 வயதினிலே. திருமணத்துக்குப்பிறகு, தனக்கென்று ஒரு தனிப்பட்ட வாழ்க்கையே இல்லாமல், குடும்ப வட்டத்துக்குள் முடங்கும் ஒரு பெண், ஒரு காலகட்டத்துக்குப் பின் அதே குடும்பத்தினரால் ஒதுக்கப்படும்போது எப்படி மீண்டும் தன் சுயத்தைக் கண்டடைகிறாள் என்பதே‘36 வயதினிலே’. ‘ஹவ் ஓல்டு ஆர் யூ’ மலையாளப் படத்தின் ரீமேக். அதை இயக்கிய ரோஷன் ஆண்ட்ரூஸ் இதையும் இயக்கியிருக்கிறார்.

ஒரு நடுத்தர குடும்பத்தை சார்ந்த பெண் ஒருவரின் மனப்போராட்டங்களை மீறி அவள் தனது அடையாளத்தை மீட்டெடுக்கும் கதை தான் இது. பணம் சம்பாதிக்க அயர்லாந்துக்குப் போகவேண்டும் என்பது இரகுமானின் கனவு. மனைவி ஜோதிகாவின் 36 வயது அதற்குத் தடையாகிறது. கணவனும் மகளும் இதனால் எரிச்சல் அடைகிறார்கள். இரகுமான் ஒரு விபத்து நிகழ்த்திவிட, விசா கிடைக்கும் நேரத்தில் தன் மீது வழக்கு வந்துவிடக் கூடாது என்பதால் ஜோதிகாவை விபத்துக்குப் பொறுப்பேற்கச் சொல்கிறார். சட்டப்படி அதிலும் சிக்கல் வர, இரகுமானின் எரிச்சல் உச்சத்தை அடைகிறது.

வசந்தியின் மகளுடைய பள்ளிக்கு வருகைத்தரும் குடியரசுத்தலைவர், அவள் கேட்கும் கேள்வியைக் கண்டு அசந்து போகிறார். அதைச் சொல்லிக்கொடுத்தது அவளது அம்மா என்று தெரிந்ததும் அவரைப் பார்க்க வேண்டும் என்கிறார். ஒரே நாளில் வசந்தியின் அந்தஸ்து கிடுகிடுவென்று உயர்கிறது. வீட்டிலும் அலுவலகத்திலும் இளக்காரமாக நினைத்தவர்கள் வாயைப் பிளக்கிறார்கள்.. ஆனால், பாதுகாப்புக் கெடுபிடிகளால் திணறும் வசந்தி, குடியரசுத் தலைவரைச் சந்தித்ததும் மயக்கம்போட்டு விழ, ஊரே அவரைப் பார்த்துச் சிரிக்கிறது. இந்த நேரத்தில் கணவரும் மகளும் வெளிநாட்டுக்குக் கிளம்பிவிடுகின்றனர்.

ஒரு நடுத்தர வகுப்பு பெண் தனக்கென ஒரு அடையாளத்தை *(Identity Crisis)* மீட்டெடுக்கும் விசயம் ஒன்று. மற்றொன்று இயற்கை விவசாயம் நடைமுறைப்படுத்தல் என்பது. குறிப்பாகப் பெண்களை அசரவைப்பதும் நெகிழ வைப்பதும் பாசம், நேசம், காதல், அன்பு, இரக்கம், தாய்மை ஆகிய பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டே இன்று வரை ஆணாதிக்க சமூகம் பெண்களை அவர்களை அவர்கள் அறியாமலேயே அடிமைப்படுத்தி வருகிறார்கள்.

அப்பாவாக, அண்ணனாக, கணவனாக, மகனாக, நண்பனாக ஆணாதிக்கச் சமூகம் பரிணமிக்கிறது. வசந்தியின் குடும்பத்தில் இத்தகைய நபர்களே குறுக்கீடு செய்கின்றனர். வெளிநாட்டுக்கு தன்னை ஒரு வேலைக் காரியாகவே அவளது குடும்பம் அழைக்கிறது. அதனை வசந்தி அடையாளம் கண்டுணர்ந்து வெதும்புவது ஜோதிகாவின் நடிப்பின் வெளிப்பாடா அல்லது சொந்த வாழ்க்கையின் சீற்றமா? அந்த அளவுக்கு நடிப்பில் நம்மை அசத்துகிறார். பெண்களின் பாசம் என்பதே அவர்களதும் முன்னேற்றத்திற்கு மிகவும் தடையாக உள்ளதை மிகஅழகாக வசந்தியின் நடிப்பில் காட்டுகிறார் ஜோதிகா.

நடுத்தர வயது பெண்களின் நிலையை எவ்விதச் சமரசமும் இன்றி, படம் முழுவதும் சொல்லிச் செல்கிறார்கள். பல குடும்பங்களில் பெண்களின் பணிகளை - பங்களிப்பைக் குடும்பம் முழுமையாக அனுபவிக்கிறார்கள். அதேசமயம் அந்தப்பெண்களின் குறைகளை மனிதாபிமானத்துடன் அணுகுவதில்லை. அந்தப் புள்ளியில் இந்தப் படம் சரியாகவே பயணிக்கிறது.



# தாத்தாவின் இறுதி ஊர்வலம் – சிறுகதை

இக்கதையில் வரும் சம்பவங்கள், பெயர்கள் கற்பனையே யாரையும் குறிப்பிடுபவை அல்ல அப்படியிருந்தால் அது தற்செயலே. திரையில் எழுத்துகள் மின்னிய வேளையில் சட்டைப்பையிலிருந்து வந்தது அக்காவின் அழைப்பு. பக்கத்தில் இருப்பவர் சற்றே முறைக்க அழைப்பை ஏற்கவில்லை நான். அதன் விளைவு குறுஞ்செய்தியாய் வந்து விழுந்தது தாத்தாவின் இறப்புச் செய்தி.

படித்த படிப்புக்கு உள்ளூரில் வேலை கிடைக்காமல் சென்னைக்கு வந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டது. முதலாளி மகனுக்குக் கல்யாணம் இன்று. காலை திருமணம் முடித்து திரும்பி காலைக்காட்சிக்கு உள்ளே நுழைந்திருந்தேன். நாளைக்கு விநாயகர் சதூர்த்தி அடுத்து வெள்ளி, சனி என தொடர்ந்து விடுமுறை இன்னிக்கு நைட் சேரனுக்கு டிக்கெட் புக் செய்து வைத்திருந்தேன்.

அவசரமா, தியேட்டரை விட்டு வெளியே வந்து அறையில் சில துணிகளை எடுத்து விட்டு, இரவு ரயில் டிக்கெட்டை தூக்கி வீசி விட்டு, கோயம்பேடு பேருந்து நிலையத்துக்கு வந்த போது மணி காலை 11.30. அங்கிருந்து சேலத்துக்குப் பேருந்தில் ஏறி உட்கார்ந்தேன்.

நகரமே களை கட்டியிருந்தது. விநாயகர் சதூர்த்திக்காக. நகருக்கு வெளியே வந்து காற்றைக் கிழித்தபடி பேருந்து வேகம் பிடித்தபோது தாத்தாவின் நினைவுகள் வந்தது.

என்னுடைய கொள்ளுத்தாத்தா கைலாசத்துக்கு இரு மகன்கள் மூத்தவர் அரசர். இளையவர் அழகர். அந்தக் காலத்திலேயே வித்தியசமாகப் பெயர்கள் வைத்திருந்தார்கள். என்னுடைய அப்பா, சித்தப்பாவின் தந்தை அழகர். அவர் இறந்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டது. அழகர் தாத்தாவின் மேல் எனக்கு எப்போதும் பிரியம் இருந்ததில்லை. பள்ளிக்கூட நாட்களிலிருந்தே எனக்கு அரசர் தாத்தாவை தான் பிடிக்கும். எப்போதும் எங்களுடன் விளையாடுவார். கட்டை பிரம்மச்சாரி.

அழகர் தாத்தா அப்போதே ஊரெல்லாம் சுற்றுவார். ஆனால் அரசர் தாத்தாவோ அப்பா, அம்மாவே கதி என வீட்டையே சுற்றி தத்துவம் பேசி வருவார். அதனாலோ என்னவோ அவருக்குப் பெண் கிடைக்கவில்லை. வயதானதால் திருமணமே ஆகாமல் அப்படியே இருந்து விட்டார். வேகத்தடையில் பேருந்து ஏறி இறக்கிய போது தாத்தாவின் தொப்பையில் மேலேறி சறிக்கி விளையாடிய நினைவுகள் எட்டிப்பார்த்தது.

அப்போதெல்லாம் அரசர் தாத்தாவை அவரது நண்பர்கள் அரைக்காதன் என்றே கூப்பிடுவார்கள். ஒரு முறை தாத்தாவின் பாதி அறுந்த காதைத் தடவியவாறே அந்தக் கதையை என்னிடம் சொல்லியிருந்தார்.

ஒரு நாள் என் கொள்ளுப்பாட்டி ஆற்றங்கரையில் குளித்துக் கொண்டிருந்தார். அப்போதெல்லாம் ஆத்துமேட்டில் திருடர்கள் தொல்லை அதிகம். அதனால் பாதுகாப்புக்கு மூத்தவனை அழைத்து சென்றிருந்தார் கொள்ளுப் பாட்டி. மாலை மயங்கும் வேளை அரையிருட்டில் யாரோ தங்களை நெருங்குவதை உணர்ந்த அரசர் தாத்தா, ஒண்டி வில்லில் கல்லை விட்டு அடிக்க, வந்தது அவரது அப்பா. கோபத்தில் அவர் வீசிய அறுவாள் தாத்தாவின் காதைப் பதம் பார்த்ததே அந்தக்கதை.

அழகர் தாத்தாவுக்கு அப்பா, சித்தப்பாவெல்லாம் பிறந்தபோது காட்டுக்குள்ளே வாழ்ந்து வந்த குழுவிலிருந்த ஒரு பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டது. ஏற்கனவே அப்பா, அம்மாவோடு கோபித்துக் கொண்டு தனிக்குடித்தனம் போயிருந்த அழகர் தாத்தாவுக்கு கேட்க ஆள் இல்லாமல் போய் விட்டது. அந்தப் பிரச்சனையைக் கூட பெரிய தாத்தா தான் முடித்து வைத்தார்.

காலங்கள் ஓடியது. அப்பா, சித்தப்பாவுக்கு திருமணம் ஆகி சித்தப்பா வெளிநாட்டில் செட்டில் ஆகிவிட்டார். அழகர் தாத்தாவும் போய்ச் சேர்ந்து விட்டார். கல்யாணம் ஆகாத கட்டை பிரம்மச் சாரியாய் இருந்தாலும் அரசர் தாத்தா தான் ஊரில் எதற்கும் முன்னே வந்து நிற்பார்.

நினைவுகள் ஓடிக் கொண்டிருந்த வேளையில் சேலம் பேருந்து நிலையத்துக்குள் நுழையும் போது மாலை மயங்கிருந்தது. சூடாகத் தேநீர் பருகி விட்டு கோவை செல்லும் பேருந்துக்குள் நான் நுழைந்த போது மாலை 6 மணி. சென்னையைப் போலவே சேலத்திலும் இரவு விளக்கில் தெரு முனைகளில் விநாயகர் ஜொலித்தார். கொண்டாட்டங்கள் களை கட்டியிருந்தது. நகரைத் தாண்டி விநாயகா மிஷன் கடக்கும் வரை ஆங்காங்கே விநாயகர் ஜொலித்தார்.

ஊரில் எதிராளிகளின் கட்டிடம் ஒன்று எங்கள் இடத்தில் இருந்தது எனச் சொல்லி அதை இடிக்கும் வரை பிரச்சனை இல்லாமல் தான் இருந்தது. அதன் பின் நடந்த எல்லா நிகழ்வு களிலும் எங்க ஆட்கள் தாத்தாவைத் தான் முன் நிறுத்துவார்கள். ஊருக்கு நடுவே உள்ள மரத்தடியில் எப்போதும் பத்து பேர் புடை சூழ அமர்ந்திருப்பார் தாத்தா. முன்னொரு காலத்தில் ஒரு அரசர் தன் பதவிகளைத் துறந்து இந்த மரத்தடியில் அமர்ந்தே மக்களுக்கு நன்மைகள் பலவற்றை கூறினாராம்.

இரவு எங்கள் கிராமத்தை அடைந்த போது மணி 9.30 இருக்கும். மாலைகளுக்கு நடுவே ஐஸ் பெட்டியில் கிடந்தார் அரசர் தாத்தா. அம்மா தோளில் சாய்ந்தபடி 'ஓ' வென்று அழுது தீர்த்தேன். சித்தப்பா மும்பை வந்த செய்தி கிடைத்தது. காலையில் 10 மணிக்கு கோவை ஏர்போர்ட்டில் அவரை அழைத்து வரச் செல்ல வேண்டும் என அப்பா என்னிடம் கூறினார். சித்தப்பா முடி இறக்க வேண்டுமாம்.

விநாயகர் சதுர்த்தி அடுத்த நாள் என்பதால் கூட்டம் குறைவாகவே இருந்தது. பள்ளி நண்பன் குமார் உடனிருந்தான். கடந்த ஆண்டு விநாயகர் சதுர்த்திக்கு ஊருக்கு வந்திருந்த போது, உடன் படித்த பசங்க அனைவரும் சேர்ந்து பெரிய சிலை வைத்து வணங்கினோம். அப்போது இவன் மட்டும் இல்லை. ஏதோ கட்சியில் இருக்கிறானாம். கருப்புச்சட்டையோடவே அலைவான். சென்னையில் இருக்கும் போது ஊருக்குள் எந்த வேலையாக இருந்தாலும் செய்து கொடுப்பான் குமார். இன்னொரு உயிர் நண்பனும் இருக்கிறான் கோபாலன். சிலை வைத்த பின் இழவு வீட்டுக்கு வரக்கூடாது என அவன் வரவில்லை என்ற செய்தி வந்தது.

காலையில் 8 மணிக்கெல்லாம் கருப்புச் சட்டையுடன் வந்த குமார், வாடா போகலாம் என்றான். கார் தெருமுனையைத் தாண்டியவுடன் ஊருக்கு நடுவே மரத்தடியில் சிலை வைத்து வழிபாடு நடந்து கொண்டிருக்கும் வேளையில், காரை நிறுத்தச் சொல்லி விட்டு இறங்கி சிலையை நோக்கி நடந்தேன். கோபாலன் அங்கிருந்தபடி சத்தமாக சொன்னான். டேய், நீயெல்லாம் இங்க வரக்கூடாது போ, நாளைக்கு நானே வர்றேன் என்றபடி அவசரமாகத் திருப்பி அனுப்பினான்.

ஏர்போர்ட் நோக்கி கார் சென்று கொண்டிருக்க கவனித்தேன். பின் சீட்டில் மாலை ஒன்றிருந்தது. டேய் குமாரு ஏதுடா இந்த மாலை? என்றேன். வா சொல்றேன் என்றபடி காரை வேகப்படுத்தினான். ஊரைத் தாண்டிய போது புதிதாக முளைத்திருந்த சமத்துவபுரத்தில் காரை நிறுத்தினான். வாடா 5 நிமிடம் போயிடலாம் என்றான். இறங்கி மாலையோடு நடந்து பெரியார் சிலை நோக்கி, டேய் வாடா இன்னிக்கு அய்யா பிறந்த நாள் மாலையைப் போடுடா ! என்றான்.

நான் தயங்கியபடி நிற்க, டேய்... கோபாலனுக்குத் தான் நீ தீட்டு எங்களுக்கு இல்லை. வா திரு திருன்னு முழிக்காம மாலையை போடு. இவரு போராடி வாங்கித் தந்த இட ஒதுக்கீட்டால் தான் நீ இன்னைக்கு சென்னையில் வேலை செய்யுற என்றான். பெரியார் சிலைக்கு மாலை போட்டு திரும்பிய போது கண்ணீல் நீர் எட்டிப்பார்த்தது.

என்னடா? சடங்கு, சம்பிரதாயம், நல்லது, கெட்டதுக்கு ஆறுதலா இல்லாம மனுசர்களைப் பிரிக்கிற சடங்கு? கூடவே சுத்துற பையன் கோபாலன் இப்படி பண்றான்டா, மனதுக்கு கஷ்டமா இருக்கு என்று புலம்பியபடி காரை வேகப்படுத்தினான் குமார் ஏர்போர்ட் நோக்கி ..

சித்தப்பாவை அழைத்து வந்து சடங்குகள் முடித்து, தாத்தாவை ஆற்றங்கரையோரம் புதைத்த போது மாலை 4 மணி ஆகிவிட்டது.

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் ஞாயிறன்று சென்னை திரும்பிய போது, போக்குவரத்து நெரிசல் என்னவென்று பார்த்தால் விநாயகர் சிலைகள் கரைக்க கொண்டு சென்றிருந்தார்கள்.

திங்கள், செவ்வாய் வேலையில் மனம் ஒட்டாமல் மாலை மெரினாவில் கால் நனைத்த போது பத்தாவது முறையாக கோபாலனின் அழைப்பில் கைப்பேசி சினுங்கியது எடுக்க மனமில்லை தவிர்த்தேன். கடல் நீரில் வந்த ஏதோ ஒன்று காலில் தட்டுப்பட்டது பிளாஸ்டர் ஆப் பாரிஸ் துண்டு வண்ணம் கரைந்தவாறு மிதந்து வந்து காலில் தட்டியது.

மனம் உறுதியாய் சொன்னது. அடுத்த வருடம் தாத்தா நினைவு நாளுக்கு ஊருக்கு கட்டாயம் போக வேண்டும். ஆற்றங்கரைக்கல்ல, சமத்துவபுரத்துக்கு ...




# முகநூல் பக்கங்களில் இருந்து...

ஒடியன்

**செய்தி: ஔரங்கசீப் சாலைக்கு அப்துல் கலாம் பெயர் .**

*1. ஒரு விதவைப்பெண்ணை ஒருவன் திருமணம் செய்துகொண்டாலோ தொட்டு விட்டாலோ தொட்டவன் அல்லது திருமணம் செய்தவன் பெரும் வரியை அரசுக்கு செலுத்தவேண்டும் . இந்த வரியை ரத்துசெய்து விதவை மணத்தை இந்து சமூகத்தில் ஊக்குவித்தவர் ஔரங்கசீப்.*

*2. ஒரு வீரன் போர்க்களத்தில் கொல்லப்படுகிறான். அவன் இந்துமதத்தின் ஒரு உட்பிரிவை சார்ந்தவன் . எரிமேடையில் விறகுகளுக்கு நடுவில் அவன் கிடத்தப்படுகிறான். சிதை மூட்டப்படுகிறது நெருப்பு திகு திகுவென எரியத்தொடங்குகிறது.. அவனது மனைவியை நெருப்புக்குள் குதிக்கச் சொல்லி கூடியிருந்த ஊர் கும்மியடிக்கிறது. அவள் கதறி அழுகிறாள் அவர்கள் பிடியிலிருந்து திமுறிப் பார்க்கிறாள்... இழுத்துப்பார்க்கிறாள். ஆனால் தப்பமுடிய வில்லை. ஊரார் சிலர் அவளை சிதையருகே இழுத்துபோய்விட்டனர். இதோ இன்னும் சில விநாடிகளில் அவள் கணவனோடு சேர்ந்து எரியப்போகிறாள்*

*தனது படையில் யார் இறந்தாலும் நேரில் சென்று மரியாதை செய்வதை முடிந்தவரை கடைபிடித்து வந்த ஔரங்கசீப் தனது இறுதிமரியாதையைச் செலுத்த அங்கும் வருகிறார். ஊராரின் செயலால் அதிர்ச்சியடைந்த அவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அப்பெண்ணை தீயில் தள்ளுவதிலிருந்து தடுக்க முயல்கிறார். ஔரங்கசீப் தங்கள் மதத்தின் நம்பிக்கையில் தலையிடுவதாக ஊர்க்குடுமிகள் ஒப்பாரிவைக்கிறார்கள்.*

*ஆனால் அதற்கெல்லாம் செவிசாய்க்காத ஔரங் உறுதியாக இருந்து அந்த வீரனது மனைவியை உடன்கட்டை ஏறுவதிலிருந்து காப்பாற்றிவிடுகிறார். அதோடு நிற்காமல் தனது ஆளுகைக்கு உட்பட்ட எந்தப்பகுதியிலும் உடன்கட்டைஏறும் இந்தக் கொடூரப் பழக்கம் இருக்கக்கூடாது என்று உத்தரவும்போட்டுவிட்டு போகிறார்.*

*3. வாழ்வில் ஒருமுறையாவது காசி சென்று கங்கையில் நீராடிவந்தால் பாவங்கள் நீங்கிவிடும் என்பது 'இந்துக்கள்' நம்பிக்கை. ஆனால் அப்போது அதற்கென்று ஒரு வரி இருந்தது. அந்த வரியை செலுத்தாமல் கங்கையில் யாரும் குளிக்க முடியாது என்ற நிலை இருந்தது அந்த வரியை நீக்கியவர் ஔரங்கசீப்.*

SUMI. B

*பாபர் மசூதி இடிப்பை வெற்றிகரமாக நிறைவேற்றிய காவி கும்பலின் அடுத்த இலக்கு 'ஜாதி அடிப்படியிலான இடஒதுக்கீடை ரத்து செய்து, பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீடு' கொண்டுவர வேண்டும் என்பதே. அதற்கான வெறியாட்டங்கள் தான் இட ஒதுக்கீடு கோரி போராடும் பட்டேல் சமூகத்தினர், பற்றியெரியும் குஜராத்... போன்ற நாடகங்கள்....*

*மக்கள் தொகை அதிகம் உள்ள முன்னேறிய பல ஜாதியினரைத் தூண்டிவிட்டு இடஒதுக்கீடு போராட்ட நாடகம் நடத்தி, கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருக்கும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதியினரின் இடஒதுக்கீடை முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும் என்பதே இம் மதவெறி கட்சிகளின் இலட்சியம், ஆட்சிக்கு வந்த நோக்கம் எல்லாமே...*

*ஒரு 22 வயது இளைஞன். ஐந்து லட்சம் பேருக்கு மேல் ஒரு கூட்டத்தை கூட்டி இவ்வளவு பெரிய போராட்டத்தை நடத்தி மூன்று நாட்களாக மாநிலத்தையே கலவரத்தால் கதற அடிக்கிறான் என்பதே ஒரு பக்காவான ட்ராமா தான்...*


*சர்வவல்லமை கொண்ட, சக்திமானை மிஞ்சிய சக்தியுடைய மோடி அவர்களுக்கு தெரியாமல் இந்த இட ஒதுக்கீட்டு போராட்ட நாடகம் நடக்கிறது. இதை அவர் எப்படிக் கையாள்வார் என்று ஊடகங்கள் கவலைபடுவதே அபத்தம்...*

*மத ஜாதிவெறி கட்சிகளின் இந்த 'இடஒதுக்கீடு போராட்ட' சாதனை, 'பாபர் மசூதி இடிப்பு, 'குஜராத் முஸ்லிம்ங்கள் படுகொலை' சாதனைகளை மிஞ்சிடும் போல.....*

# தகுதி-தெறம

12

அரசூர் அ.ப.சிவா



நிறைஞ்ச வெள்ளிக்கிழமை பொழுதோட சினிமாவுக்கு 2 டிக்கெட் புக் செய்துவிட்டு தம்பி யுவராசை வரச் சொல்லி எல்லா வேலையும் 5 மணிக்கே முடிச்சுட்டு உட்கார்ந்தா, டேய்...நான் வர்றதுக்கு இன்னும் அரை மணி நேரமாகும். இல்லையன்னா தாசில்தார் ஆபிசுக்கு வா என்றான்.

என்னடா? தம்பி நீயோ வெட்டி ஆபிசரு. உனக்கென்ன தாசில்தார்ஆபிசுல வேலை எனக் கேட்டேன். டேய்... நீ வாடா முதல்ல என்றவாறு போனை கட் செய்து விட்டான்.

10 நிமிடத்தில் வட்டாச்சியர் அலுவலகம் முன்னே சென்றேன். மூச்சிறைத்தபடி உள்ளே இருந்து வந்தான் தம்பி. உடன் வந்தவரிடம் பைக்கை கொடுத்து விட்டு காருக்குள் வந்து அமர்ந்தான். வந்தவுடன் ஏ.சி அளவைக் கூட்டினான்.

என்னடா? தம்பி இந்த பக்கம் காத்து வீசுது. உருப்படியா ஏதாவது வேலை செய்யற போல என சொல்லி முடிக்கவில்லை, பொரிந்து தள்ளினான்.

உன்னை மாதிரி பேசிட்டு திரியறவங்களைப் புடிச்சு முதல்ல உதைக்கனும். புள்ளையை பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்போனா ஜாதிச் சான்றிதழ் வேணும்னு கேட்கறானுக. இங்க வந்தா அதக் கொண்டுவா, இதக் கொண்டுவா அப்படின்னு அலைக்கழிக்கறானுக. என் ஜாதிப் பெருமை என்ன ? கௌரவம் என்ன? இவனுக சர்டிபிகேட் கொடுக்க வேண்டியிருக்கு, நான் என்ன ஜாதின்னு. ஆமா நீதான் எதுக் கெடுத்தாலும் வியாக்கானம் பேசுவியே! பள்ளிக்கூடத்துல எதுக்கு ஜாதி கேட்குறாங்க ! படிக்கறதுக்கு எதுக்கு ஜாதி? அப்புறம் எப்படி ஜாதி ஒழியும்? நீங்க வேணும்னா கருப்புச் சட்டையைப் போட்டுட்டு ஜாதியை ஒழிக்கிறோ முன்னு சுத்திட்டு திரிய வேண்டியதுதான்.

பொறுடா! தம்பி நீ எதுக்கு ஜாதி சான்றிதழ் வாங்குன என்றேன்? புள்ளையப்பள்ளிக் கூடத்துல சேர்க்கத்தான்! சரி. புள்ளை எப்படி வந்தது என்றேன். அட இதென்னடா கேள்வி கல்யாணம் பண்ணுனதாலதாண்டா என்றான்.

அப்ப நீ கல்யாணம் பண்ண ஜாதி பாக்கலாம். ஆனா பள்ளிக்கூடத்தில் புள்ளையை சேர்க்க அரசாங்கம் ஜாதி கேட்கக் கூடாது என்னடா உங்க நியாயம் என்றேன் நான்.

அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் என அவன் முடிக்கும் முன் இடைமறித்தேன். இருக்கு தம்பி நிறைய சம்பந்தம் இருக்கு. இப்ப கொஞ்ச நேரம் முன் நீ என்ன சொன்ன? என் ஜாதிப் பெருமையென்ன? கௌரவம் என்ன? அப்படித்தான் சொன்னாய்! ஆம் என தலையாட்டினான் தம்பி.

இந்த ஜாதி இருக்கு பாரு. அது தனியா இயங்காது. உன்னோட ஜாதி, கௌரவம் நிறஞ்சதுன்னு சொன்னா கௌரவம் குறைச்சலா சில ஜாதிகள் இருக்கும். உங்களவிட கௌரவம் அதிகமா சில ஜாதிகள் இருக்கும். இதப்போலத்தான் மத்த எல்லா விசயங்களும். இந்தியச்சமூகம் பலநூறு ஆண்டுகளா அப்படியேதான் உள்ளது. அதைச் சரி செய்யத்தான் இந்த ஏற்பாடு என்றேன் நான்.

அதெப்படி தாழ்ந்த ஜாதிக்காரனுக்கு சலுகைகள் தந்தால் எல்லாம் சரியாப் போய் விடுமா? இது தம்பி யுவராசின் கேள்வி.

தம்பி கவனமாப் பேசு. தாழ்ந்த ஜாதி அல்ல, தாழ்த்தப்பட்ட ஜாதி, பிற்படுத்தப்பட்ட ஜாதி. இப்ப சொல்லு தாழ்த்தியது எது? எவன்? பிற்படுத்தியது எது? எவன்? அவர்கள் மொத்த மக்கள் தொகையில் எத்தனை சதவிகிதம் பேர் இருக்காங்க, அரசு வேலைகளில் அவர்கள் நிலை தெரியுமா உனக்கு?

அய்யோ !! இராமா, பாயும் புலி படத்துக்கு கூட்டிட்டு போறேன்னு சொல்லிட்டு கமல் படம் மாதிரி புரியாமேயே பேசிட்டு இருக்கானே..

சரிடா தம்பி. உனக்கு புரியுற மாதிரி ஒரு குட்டிக்கதை ஒன்னு சொல்றேன் கேட்டுக்க. மறுபடியுமா??? எனக் கத்தினான் தம்பி. அப்படி இல்ல தம்பி, ரஜினி படம் மாதிரி புரியுற மாதிரியே சொல்றேன் கேட்டுக்க.

ஒரு கிராமத்தில அரை கிலோ மீட்டர் தூரத்துக்கு ரோடு குழியும் மேடுமா இருந்துச்சு. அந்த ஊரு பிரசிடெண்டு குழி மேட்டெல்லாம் மட்டம் செஞ்சு புது ரோடு போடலாமுன்னு உன்னை மாதிரி ஒரு ஆளைக் கூப்பிட்டார். இப்ப சொல்லு நீ எப்படி மட்டம் செய்வாய்??

இதென்ன பிரமாதம் JCB வரச்சொல்லி மேட்டை வெட்டி குழிக்கு மண்ணை தள்ளி மட்டம் செய்வது தான். நான் இடை மறித்து, இல்லை தம்பி, மேட்டைக் கரைக்க மேடு ஒத்துக்கலை. இப்ப என்ன செய்வாய்??

அதுக்கும் வழி இருக்கு. வெளியே இருந்து மண்ணைக் கொண்டு வந்து மட்டமா கொட்ட வேண்டியது தான் என்றான்?? சரியாப் போச்சு போ. இப்பவும் மேடு சொல்லுது குழிக்கு அதிகமா மண் கிடைச்சு இருக்குன்னு...

அட எதென்ன அநியாயம் அப்புறம் எப்படி மட்டம் செய்வது , என்றான் தம்பி யுவராசு.

ஆ அப்படி வா வழிக்கு. இப்ப அந்தக் கதையில் வர்ற மேடு உயர் ஜாதியினர். குழி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்கள், அந்த அதிகப்படியான மண் என்பதே இட ஒதுக்கீடு.

நீ சொல்றதெல்லாம் நியாயமாத்தான் இருக்குது. ஆனா இப்படி இட ஒதுக்கீடு கொடுத்து தகுதி இல்லாத கீழ் ஜாதிப்பய எல்லாம் வேலைக்கு வந்ததால்தான் அரசாங்க வேலையெல்லம் இப்படி ஊழல் பெருகி கிடக்குது. இது பத்தாதுன்னு தனியார் துறையில் இடஒதுக்கீடு வேணுமுன்னு வேற கேட்கறீங்க?? அரசாங்கம் கொடுக்கலாம். ஆனால் தனியார் எப்படி கெடுப்பான்?? என்றான் தம்பி???

கண்டிப்பா தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வேணும் தம்பி. நம்மூர்ல மேற்கிலிருந்து, கிழக்காக, உயரமா தனி ஒரு E.B LINE போகுது அது எதுக்குன்னு தெரியுமா?

தெரியுமே! என ஒரு தனியார் நூற்பாலையின் பெயரைச் சொல்லிவிட்டு, அது மட்டுமில்லை அந்த லைன்ல POWER CUT எப்பவும் இருக்காது என்றான். இப்ப தெரியுதா தம்பி அரசாங்கம் பெரிய பெரிய ஆலைகள், தொழிற்சாலைகள் அமைக்க தடையில்லா மின்சாரம், சலுகை விலையில் இடங்கள் அப்படி எல்லாம் தர்றாங்க. அரசாங்கம் தனியார் பெரு முதலாளிக்கு நாட்டின் இயற்கை வளங்களை சலுகையாத் தரலாம். நாங்க அந்த நிறுவனங்களிடம் இடஒதுக்கீடு எதிர்பார்க்கக் கூடாதா? என்னடா உங்க நியாயம் என்றேன்.

அப்புறம் இந்த இடஒதுக்கீடு வந்து தகுதி தெறம இல்லாதவன் அதாவது உங்க பாசையில் கீழ் சாதிப்பசங்க அரசாங்க வேலைக்கு வந்ததால் தான் லஞ்சம், ஊழல் பெருகிப்போச்சு. அப்படிங்கற மேம்போக்கான வாதமிருக்கே - அது வடிகட்டிய பொய். 2008 ல் மத்திய அரசு பணிகளில் எல்லா பிரிவினர் நிலை என்ன அப்படின்னு பாரு (பின் அட்டையில் படம் இணைப்பு). அப்ப இன்னிக்கு சூழலில் அரசு வேலைகளில் நிலவும் இலஞ்ச ஊழலுக்கு அதிக்கப்படியான காரணம் உயர் ஜாதிக்கரார்களே . உங்க வாதப்படி .

இப்ப தெரியுதா? உயர் சாதிக்காரர்கள் முக்கால் வாசிப்பேரு அங்க இருக்காங்க. இதில்லாமல் 2011ல் வெளியிட்ட அறிக்கை இருக்கு. அதிலும் அதே நிலை தான். என்ன அந்த அறிக்கை அதிகாரப்பூர்வமா தாக்கல் செய்யப்படவில்லை.

இன்னிக்கு சூழலில் ஜாதிப்பெருமை பேசிட்டு 40 - 50 வயசு மட்டும் பெரிய முதலாளிகளாகவும் தொழில் அதிபர்களாகவும் வாழ்க்கையை ஓட்டிட்டு, திடீரென்று ஒருநாள் வந்து, நான் தான் இந்த ஜாதிக்கு தலைவன்னு கட்சி ஆரம்பிச்ச பிற்படுத்தப்பட்ட - அதாவது வெளிப்படையா சொன்ன இங்கிருக்கிற ஆதிக்க ஜாதித் தலைவனுக கிட்ட கேளு தம்பி, உங்க ஜாதி இடஒதுக்கீட்டுக்காக அவர்கள் செய்த வேலை என்னவென்று? என்றேன்.

அப்பறம் இடஒதுக்கீட்டால் தகுதி இல்லாத மக்கள் உள்ள போறது என்பது முட்டாள் தனமான வாதம். இப்ப மருத்துவ, பொறியியல்துறை கட் ஆப் மார்க் பாரு. உயர்ஜாதியினருக்கும் தாழ்த்தப்பட்டவர் களுக்கும் இடையே 4 அல்லது 5 மார்க் தான் வித்தியாசம் இருக்கும்.

4, 5 மார்க்கில் தான் தகுதி, தெறம இருக்கா தம்பி? அப்புறம் இடஒதுக்கீடு அப்படிங்கற வார்த்தையே தவறு. அது சரியாகச் சொன்னா வகுப்புவாரி பிரதிநிதித்துவம். அதாவது எந்த பிரிவு மக்கள் மொத்த மக்கள் தொகையில் எத்துனை சதவீதம் இருக்காங்க அப்படின்னு பார்த்து அதே சதவீதம் கல்வி, வாய்ப்புகளைப் பிரித்து கொடுப்பதே இந்த வகுப்புவாரியான பிரதிநிதித்துவம் என்றேன்..

பேச்சின் முடிவில் திரையரங்கம் வந்து விட்டது. பேச்சை நிறுத்திவிட்டு படம் பார்க்க ஆரம்பித்தோம். இடைவேளையில் ஒரே ஒரு POP-CORN யை கையில் பிடித்துக் கொண்டு வந்தான். தம்பி உனக்கு பாதி எனக்கு பாதி என்றபடி. ஆமாண்டா தம்பி,பங்கிட்டுத் தின்னா பசியாறும். கொடுடா இடஒதுக்கீடு.



பொள்ளாச்சி சி.விஜயராகவன்

# பார்ப்பான் வெல்வது ஏன்? தமிழன் தோற்பது ஏன்? பார்ப்பானில் எல்லாரும் போராளிகளா??

'கடவுள் எண்ணம் ஒழிந்தால் பார்ப்பான் இருக்கமாட்டான். பறையன் இருக்கமாட்டான். பாட்டாளி, தொழிலாளி, முதலாளி, ஏழை - பணக்காரன் என்கிறவன் எவனும் இருக்கமாட்டான்!! பின் யார் இருப்பான் என்றால் மனிதன் இருப்பான்'! - தோழர் பெரியார் 11.05.1970 விடுதலை

'கடவுள் ஒழிந்தால் பார்ப்பான் ஒழிவான் - பார்ப்பான் ஒழிந்தால் மதம் ஒழியும் - மதம் ஒழிந்தால் சாதி ஒழியும் - சாதி ஒழிந்தால் மக்களிடையே இருக்கிற பேதம் ஒழியும்' - தோழர் பெரியார் 31.03.1976 விடுதலை

அந்த வரிசையில் தோழர் சங்கமித்ரா M.Com.,BGL.,CAIIB அவர்கள். இந்தப் புனைப்பெயருடன் 1970 களில் துவங்கி திராவிடர் கழக மாணவர், இளைஞர் அணித் தோழர்களுக்கான கோடைக்கால பயிற்சி வகுப்புகளுக்கு இவர் எழுதிய கட்டுரைகள் அந்நாளில் பல ஆயிரம் இளைஞர்களை இயக்கத்தின் பக்கம் கொண்டுவந்து சேர்த்தது. அக்கட்டுரைகளில் குறிப்பிடத்தக்கவை 1. காதலிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் 2. கல்லறை காயும் முன் 3. நாளை சாகப்போகும் கிழவன் 4.இளைஞர்களே! சாகத்துணிவுக் கொள்ளுங்கள் என்பவை ஆகும். இவை 80 களில் திராவிடர் இயக்கத்தில் இளைஞர்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. 1979 முதல் 1986 வரை விடுதலை நாளிதழ்களில் இரண்டாயிரம் கட்டுரைகள். (A4 ல் 4 பக்கம் எனில், 8000 பக்கங்கள்)

விடுதலை நாளிதழில் பெரியார் பிறந்தநாள் மலர் - சிந்தனையாளன் மாத இதழில் பெரியார் மலர் - பொங்கள் மலர்களில் 100 கட்டுரைகள் மற்றும் சங்கரமடமும் சவுண்டிகளும், பெண் பக்கம் பேசுகிறேன், மரத்தடி மண்ணார் சாமி போன்ற தொடர்கட்டுரைகளும் இவரது கொள்கை வீச்சின் அடையாளங்களாகும். அன்னாரின் கட்டுரைத் தொடர்களில் ஒன்றுதான் இக்கட்டுரையின் மேலே கண்ட தலைப்பும் துணைத்தலைப்பும் ஆகும். இந்தத் தலைமுறைக்கு இக்கட்டுரையை அறிமுகப் படுத்துவதில் 'காட்டாறு' தொகுப்புக் குழு பெருமை கொள்கிறது.

*மூவாயிரம் வருசத்துக்கு முன்பு சிந்து நதிக் கரையில் வந்து கூடிய ஆதி ஆரியக் காட்டுமிராண்டிகள், 'செம்புக் கோட்டைகளில்' வாழ்ந்த திராவிடர்களைப் பார்த்து பிரமிக்கிறார்கள்.'அய்யோ, இத்தனை வசதியும் நாகரிகமும் படைத்த கோட்டை வாசிகளை நாம் எப்படி வெல்ல முடியும்?' என்று.*

*அதற்கு ஆரியர் தலைவன் சொல்கிறான் "சே! என்ன நீ, இப்படிப் பயப்படுறே! நாம் அத்தனை பேரும் போராளி. திராவிடர்களில் - அதோ பார், அந்த வீதியில் வசிக்கிற பத்து வீட்டுக்காரன்தான் போராளி. அவர்களைக் கொன்று விட்டால், இந்தக் கோட்டையும் இந்த ராஜ்யமும்நமதாகிவிடும்"*

*ராகுலசாங்கிருத்தியானின் 'வால்காவிலிருந்து கங்கை வரை'யில் இச் செய்தி இருக்கிறது. சுட்ட செங்கல் - அவர்களுக்குச் செம்பாய்த் தெரிகிறது. இன்றும் இது உண்மை.*

*திராவிடர்கள் சிலர் மட்டும் போராளி என்பதும், பார்ப்பனர்கள் அத்தனை பேரும் போராளி என்பதும் இன்றும் உண்மை அல்லவா? பார்ப்பன மேலாண்மையை ஆதரிக்காத ஒரே ஒரு பார்ப்பானைக் காட்டுங்கள். இருக்க மாட்டான்.*

*ஆனால், திராவிட வெற்றியை லட்சியமாகக் கொண்ட திராவிடர்கள் அங்கொருத்தர் - இங்கொருத்தர்தான். இந்த ஒரே ஒரு ஆளை வீழ்த்துவது பார்ப்பானுக்கு எப்பவும் சிரமமாக இருந்ததே இல்லை. சாம, பேத, தான, தண்டம் என்று அவனிடம் எத்தனையோ வழிமுறைகள்.*

*வெள்ளைச் சதைப் பெண் என்ற தற்கொலைப்படை அவனிடம் எப்பவும் தயாராகவே இருந்தது. நம் கண் முன்னே தமிழ் நாட்டில் பார்ப்பனப் பெண் ஆட்சியைப் பிடிக்கவில்லையா? இதோ மெல்ல மெல்ல 'சிவபார்வதி' பாப்பாத்தி ஆந்திராவில் அரியணை ஏறிக் கொண்டில்லையா?*

**புத்தருக்குப் பின் தலைவன் எங்கே?**

பார்ப்பனர் அல்லாதாரில் புத்தருக்குப் பின் 'புலே' வரும்வரை, பெரியார் வரும் வரை தலைவர்களே தென்படவில்லையே! புத்தர் கூட பார்ப்பானை நேரடிப் போரில் வெல்லவில்லையே! தனது தத்துவங்களைத் தெருத்தெருவாகப் பிரச்சாரம் செய்து, கூட்டம் சேர்த்து, பார்ப்பனீயம் பலமிழக்கச் செய்தார் புத்தர். புத்தர் காலத்துக்குப் பிறகு பாாப்பனீயம் புத்துயிர் பெற்றது மட்டுமல்ல. அப்படி ஒரு மதம் இந்தியாவில் இருந்த அடிச்சுவடே தெரியாமல் ஆக்கினார்களே!

புத்தம் எனது மதம் என்று போற்றிய அசோக சக்கரவர்த்தி - இருந்த சரித்திரத்தை கி.பி.1825ல் ஆங்கிலேயர்கள் அல்லவா தோண்டியெடுத்துக் கண்டு பிடித்தார்கள்? மத்தியப் பிரதேச சாஞ்சி ஸ்தூபி பல நூறு அடிகள் சுற்றளவும், உயரமும் கொண்ட பிரம்மாண்டமான கட்டடம் - அதை மண்ணைப் போட்டு மூடினார்கள் என்றால் - பார்ப்பனர்களின் ஒட்டுமொத்த, உடன்பட்ட, சலியா உழைப்புக்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்?

**பதுங்கி வாழ்ந்த சித்தர்களும், சமணர்களும்**

பார்ப்பனியத்தை வேரறுக்கப் புறப்பட்ட சமணர்களின் கதி என்ன ஆனது? அரச அனுமதியோடு பொதுமக்கள் முன்னிலையில் எட்டாயிரம்பேர் கழுவேற்றப்பட்டிருக் கிறார்களே! யார், பிறகு, எப்படி பார்ப்பானை எதிர்க்கத் துணிவார்கள்? காட்டில் பதுங்கிக் கொண்டு, கோவணுத்துடன் திரிந்த சித்தர்கள் அல்லவா-

பறைச்சி என்பது ஏதடா, பணத்தி என்பது ஏதடா?

இறைச்சி தோல் உடம்பிலே இலக்கமிட்டிருக்குதோ -என்று கேட்டார்கள்?

வேதம் ஓதி வியர்த்துப் போகின்ற சட்ட நாதப்பட்டரே, நீ மூச்சுத்திணறிச் சாகும்போது வேதம் உன்னைக் காபாற்றுமா என்று கேட்டார்களே? என்ன பிரயோசனம்? தனித்தனி உதிரி மனிதர்கள் - அதுவும் காட்டில் - அதிலும் பதுங்கிக் கொண்டு.

**வேமன்னா – சர்வக்ஞர் – புலே – அத்திப்பட்டு வெங்கடாசல நாயக்கர்.**

ஆந்திராவில் வேமன்னாவும், கர்னாடகாவில் சர்வக்ஞரும், மகாராட்டிரத்தில் புலேவும், தமிழர் அத்திப்பட்டு வெங்கடாசல நாயக்கரும் பார்ப்பானைக் கதிகலங்க அடித்திருப்பது உண்மைதான். என்ன விளைவு? ஒரு விளைவும் இல்லையே! அரச பலத்தோடு, சமூகம் தழுவிய சடங்காச்சாரமாய் பார்ப்பனீயம் வீற்றிருந்து கோலோச்சும்போது ஒற்றை ஆட்கள், உதிரிகள், ஒரு சிலர், எத்தனை உக்கிரமாகப் போரிட்டுதான் என்ன பயன்?

**இராமலிங்க அடிகளார்**

இராமலிங்க அடிகள் ஒரு நாத்திகர் கூட இல்லை: நல்ல பக்தர். அவர் என்ன தப்புச் செய்தார்? பார்ப்பனர் அல்லாத ஒரு பக்த சபையை அமைத்தார் என்ற தப்புத்தானே? அவரை நெருப்பில் போட்டு எரித்ததை எத்தனை தமிழர்கள் கேட்டார்கள்? இராமலிங்க அடிகள் நெருப்பில் வெந்த அன்றைக்கே தமிழகத்தில் ஒரு பார்ப்பனக் குஞ்சு, குளுவான், மிச்சம் வைக்கப்பட்டிருக்கலாமா? 'சோதியில் கலந்தார்' என்று அவன் புளுகினதை, இந்தச் சோற்றால் அடித்த பிண்டம் கேட்டு அமைதி கொண்டு, சிதம்பரம் பட்டன்களுக்கு சேவகம் செய்யக் கூடிநின்ற கொடுமை என்ன? அந்த முன்குடுமிப் பார்ப்பனர்கள் இன்னும் மோசமாகிப் போனதென்ன?


**நமது கால வரலாறு – பெரியார்**

கண்முன் நடந்த நமது கால வரலாறு பெரியார். பார்ப்பானை ஒழிக்க ஒரு கொள்கை வகுத்து, கட்சி அமைத்து, சொத்தும் வைத்து விட்டுப் போனவர் பெரியார். கொள்கை, கைக்கொள் என்று ஆகி, கட்சி கைக்குள் என்று ஆகி, சொத்து சுகம் என்று ஆகிவிடவில்லையா? வெட்கம், மானம் உள்ள தமிழன் - பெரியாருக்குத் தமிழில் ஒரு முழுமையான வரலாறு இல்லாமல் ஆங்கிலத்தில் ஒரு நம்பகமான வரலாறு கூட இல்லாமல், தமிழ்நாட்டில் பெரியார் நிறுவனம் செயல்படுவது கண்டு வேதனைப்பட வேண்டாமா? இதில் அவருடைய சொத்தும் பணமும், இன்று, இன்னொரு தமிழன் கலைஞர் கருணாநிதியைக் குழிதோண்டி மூடப்பயன் படுகிற கொடுமை வேறு! எதில்தான் தமிழன் ஒன்றாய் உறுதியாய் இருந்தான்?

**தமிழினப் போராளி**

அன்றும் சரி: இன்றும் சரி. பார்ப்பான் ஒவ்வொருத்தனும் போராளி: ஒவ்வொருத்தனும் உளவாளி. அவர்கள் எல்லாருமாய், நிரந்தரப் போர்க்களத்தில் என்றும் என்றும் நிற்கிறார்கள். ஆனால், தமிழன் - ஈனச் சுகத்திற்கெல்லாம் இனத்தை அடகுவைக்கும் மானப்பதராய் - மண்புழுவாய், உதிரியாய், கேனப்பயலாய்க் கேடுகெட்டுப் போகிறவன். இதைத்தான் பெரியார் சொன்னார். நமக்கும் உறுதியாகத் தெரிகிறது. *THE BRAHMIN IS COMMUNALLY COMMUNAL – WHILE THE NON-BRAHMIN IS INDIVIDUALLY- COMMUNAL!*

-நன்றி – 'சிந்தனையாளன் ஜீலை 1995'




# முகநூலில் மறுப்புக் கருத்துக்கள்

Samooga Neethi Mu Garkey

ஐயா உங்களுடன் பல கருத்துக்களில் உடன்படுகிறேன். ஆனால், மிகவும் கண்டிக்கக்கூடிய வகையில் மது குறித்த தங்கள் பதிவு உள்ளது.மார்க்சிய அடிப்படையில் தொழிலாளர் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் எழத்தளர் மாக்சிம் கார்க்கி தம்முடைய புகழ்பெற்ற 'தாய்' நாவலின் கதைத்தொடக்கமே, மதுவிற்கு எதிராகவே தொடங்கிறார். இதுவும் ஒருவேளை மனு வேலையாக இருக்குமோ? உங்கள் மது குறித்த கருத்துடன் விவாதிக்க விரும்புகிறேன். தொடர்பு கொள்ளவும்.

**பழ.ரகுபதி,** முதன்மை ஒருங்கிணைப்பாளர், நேர்மை மக்கள் இயக்கம்.

**மது விலக்கு கேட்பது பைத்தியகாரத்தனமா?**

பெரியாரின் கொள்கைப் பற்றாளர்களால் நடத்தப்படும் சிறு பத்திரிக்கை காட்டாறு. இந்த இதழின் ஆகஸ்ட் மாத பதிப்பில், மதுவிலக்குக்கு எதிராக கடும் விமர்சனத்தை ஏவியிருக்கிறது. அதற்கான பதிலை நாம் தர வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

பெரியார் தமிழக மக்களின் சுயமரியாதைக்கும், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், பெண்ணுரிமை என பல படிநிலைகளில் சமூக நீதிக்காகப் போராடியவர். அதன் பலனை இன்றைய தமிழ் மக்கள் அடைந்துள்ளார்கள். யாரால், இந்தப் பயன் கிடைத்ததோ அவரை மறந்து போனவர்களும் உண்டு. சமூக நீதிக்காக பெரியாரின் போராட்டங்களை, தியாகங்களை நாம் மதிக்கிறோம். அதற்காக, அவரின் வழித்தோன்றல்கள் சொல்லும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது. மதுவிலக்குக்கு எதிரான அவர்களின் கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இன்றைக்கு, கல்வி கற்கும் கல்வி நிலையங்களில்கூட மாணவர்கள் குடித்துவிட்டுச் செல்லும் நிலை வந்துள்ளது. பெண்கள் குடிக்கிறார்கள். பெற்ற குழந்தைகளைக் கொல்கிறார்கள். குடித்துவிட்டு வீதிகளில் ஆடைகள் இன்றிக்கிடக்கும் அவலத்தைக் காண்கிறோம். சமூகக் குற்றங்களுக்கு மது ஒரு காரணியாக இருக்கிறது. பொருளாதாரப் பாதிப்புகளால் பலகுடும்பங்கள் தற்கொலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. குடிநோயால் இலட்சோப லட்சம் மக்கள் செத்துக் கொண்டுள்ள அவலம். நாட்டின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. பொது ஒழுங்கு கெட்டுப் போய்விட்டுள்ளது.

இதுதான் பெரியார் விரும்பிய தேசமா? சமூக நீதியா? பொருளாதார மேம்பாடா? சுயமரியாதையா? ஏன் வந்தது இந்த அவலம்? அரசுக்கு வருவாய் வரவேண்டும் என்பதற்காக, அரசே, மதுக்கடைகளைத் திறந்து நடத்துகிறது. மதுக்கடைகளுக்கு காவல் காக்கிறது. மதுக்குடிப்பது உடலுக்கும், குடும்பத்திற்கும் கேடு என்று சொல்லிக் கொண்டு அதனை ஊக்குவிக்கிறது.

மதுவினால், தமிழினமே அழிந்துகொண்டுள்ளது. இப்போது இதற்கு அணை போட்டாலும் இன்னும் அரை நூற்றாண்டுகள் கழித்துத்தான் சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்னும் நிலை உள்ளது. மதுவிலக்கு அவசியத்தேவை. சமூக நலத்தை விரும்பும் எவரும் மதுவை ஆதரிக்க மாட்டார்கள். சமூக நீதிக்காக போராடிய பெரியார் இயக்கங்களும் வழித் தோன்றல்களும் மது விலக்குக்கு எதிராக நிற்பது அவமானத் திற்குரியது.

Gowri Sankar

மதுவிலக்கு பற்றிய இந்த மாதக் காட்டாறு இதழில் வந்த கட்டுரை வேதனையையும்,அதிர்ச்சியையும் ஒருசேரத்தருகிறது.மனுசாஸ்திரம் மதுவை எதிர்க்கிறது என்பதற்காக நாம் மதுவை ஆதரிக்க வேண்டும் என்பதுபோல் உள்ளது. ஜாதி,மதம் போன்றவை ஒழிக்கப்படமால் மதுவை மட்டும் ஏன் ஒழிக்க வேண்டும் என்பதுபோல் உள்ளது.

மதுவால் ஏற்படும் தீங்கை நம் கண்முன்னால் அன்றாடம் காண்கிறோம். ஆனால் கட்டுரை ஆசிரியர் எந்த ஒரு சமூகப்பார்வையும் அல்லாமல் கண்மூடித்தனமாக மனுவை எதிர்க்கிறோம் என்பதற்காக மதுவை ஆதரித்து எழுதியிருக்கிறார். இவ்வாறான செயல்களால் மனுசாஸ்திர ஆதரவாளர்கள் நம்மை எள்ளி நகையாடவே செய்வர்.

# மனித உடலமைப்பும் உளவியலும்



டாக்டர். பெரியார்செல்வி

வழக்கமாக, திரைப்படங்களில் ஏன்? பலரும் நேரில் கூட சந்திக்கும் காட்சிதான் மருத்துவர் அறுவைசிகிச்சை கூடத்திலிருந்து வெளியே வரும்போது நாங்கள் முடிந்தவரை முயற்சி செய்து விட்டோம் இனி அவன் செயல் என மேலே கை காட்டுவார்கள். உதாரணமாக 'வசூல் ராஜாMBBS' திரைப்படத்தில் புற்றுநோயாளியைக் காப்பாற்ற முடியாது என்று தெரிந்ததும் டாக்டர் (சினேகா) இனி கடவுள்தான் காப்பத்தணும் என்று கமலிடம் சொல்வார். அதற்கு கமல் **நீங்கள் டாக்டருக்கு படிச்சிங்களா? கடவுளுக்கு படிச்சிங்களா** என்பார். இன்று நிறைய மருத்துவர்கள் அப்படித்தான் உள்ளார்கள். இந்தக் கட்டுரையில் மனித உடலமைப்பு பற்றிய ஆய்வுகளின் வரலாறு பற்றியும், பின்பு மருத்துவ ஆய்வுகளின் வரலாறு பற்றியும் பார்ப்போம்..


**1.மனித உடலமைப்பு**

அல்க்மீயான் (Alcmaeon – 530 BCE) என்ற கிரேக்க அறிஞர் தான் மனித மற்றும் விலங்குகளின் உடல்களில் முதலில் அறுவைப் பரிசோதனைகள் செய்தவர்களில் முதன்மையானவராக கருதப்படுகிறார். கண் நரம்புகள், யூஸ்டேசியன் குழல்(காதையும் வாயையும் இணைக்கும் குழல் ), தமனி மற்றும் சிரை இரத்தக்குழாய்களுக்கு இடையே உள்ள வேற்றுமைகள் கண்டுபிடித்தவரும் இவரே.

கேலன்-*130 CE* என்ற கிரேக்கர் மிகப் பிரபலமான மருத்துவர் ஆவார். மனித உடலின் பல்வேறு தசைகளை முதன்முறையாக இனங்கண்டு விவரித்தார். தண்டுவடத்தின் முக்கியத்துவத்தையும் முதன்முதலில் எடுத்துரைத்தவர் இவரே. இவர் பல நூல்களை எழுதியுள்ளார். *Anatomical Preparations* என்ற நூல் மருத்துவ துறையில் பல சந்ததிகள் நிலைத்து நின்றன.

ஆண்டிரியாஸ் வெசேலீயஸ் *(1514-1564)* என்ற பெல்ஜிய நாட்டு மருத்தவர் *1543* ல் *de humani corporis fabrica* என்ற நூலை வெளியிட்டார். இந்நூலை வைத்துதான் மருத்துவதுறை வரலாற்றை மூன்று காலக்கட்டமாக பிரிப்பார்கள். வெசேலீயஸ்க்கு முற்பட்ட காலம், வெசேலீயஸ் காலம், மற்றும் வெசேலீயஸ்க்கு பிற்பட்ட காலம். இதற்குக் காரணம் அதில் விவரிக்கப்பட்டுள்ள செய்திகளின் பிழையின்மை மற்றும் அதில் காணப்படும் விளக்கப்படங்களின் உயர்ந்த தன்மை ஆகியவை தான்.

காபிரியேல் ஃபல்லோபியஸ்*(Gabriele Falloppio) 1523-1562* என்பவர் மனிதக்காதின் உள்ளமைப்பைச் சரியாக விளக்கினார். இனப்பெருக்க உறுப்புக்களின் அமைப்பு பற்றியும் குறிப்பாக ஃபல்லோபியன் குழாயின் (அவரின் பெயரால் அழைக்கப்பட்ட உறுப்பு) அமைப்பு பற்றியும் அவர் விளக்கமளித்தார். ஆணுறையைக் கண்டுப்பிடித்த பெருமையும் அவரைச் சாரும்.




Alcmaeon



Andreas Vesalius



Gabriele Falloppio



Hippocrates

### 2. இரத்த ஓட்டம்

மனித உடலுக்கு இரத்தம் மற்றும் இரத்த ஓட்டத்தின் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் ஹிப்போகிரேட்டஸ் (hippocrates) மற்றும் அரிஸ்டாட்டில் போன்றவர்களின் கண்டுபிடிப்புகளால் அறியப்பட்டது. எனினும் இரத்தம் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்ற வினாவிற்கு விடை தெரியவில்லை. பல மதவாத மற்றும் உணர்ச்சிபூர்வ செயல்களும் எண்ணங்களும் இரத்தத்தோடு தொடர்பு படுத்தப்பட்டு வந்தன.

மைக்கேல் சர்வீடஸ் 1511 - 1533 இதயத்தின் வலது இடது பக்கங்களைப் பிரிக்கும் இடைச்சுவரில் துவாரங்கள் இல்லை என்பதை முதலில் நிரூபித்தார். மேலும் இரத்தம் நுரையீரலுக்குள் செல்வது காற்றுடன் கலப்பதற்குத்தான் என்றும் அதனால் தான் அதிக சிவப்பு நிறத்தை பெறுகிறது என்று நிரூபித்தார்.

வில்லியம் ஹார்வி (William Harvey) 1578 - 1657 என்ற இங்கிலாந்து நாட்டு மருத்துவ நிபுணர் தன்னுடைய ஆய்வுகளைத் தொடங்கினார். இரத்தம் தமனி வழியாக விட்டு விட்டும் சிரை வழியாக ஒரே சீராகவும் வெளியேறி இரத்தம் உடலின் ஏதோ ஒரு பகுதியிலிருந்து அழுத்தப் பட்டு வெளியேறுகிறது என்ற முடிவுக்கு வந்தார்.

1603 ஆம் ஆண்டு ஃபாபிரிஸியஸ் சிரைகளில் வால்வுகள் உள்ளதை கண்டுபிடித்தார். இது ஹார்விக்கு பெரிதும் உதவியது. ஹார்வி இரத்தஓட்டம் ஒரு எந்திரத்தனமான செயல்தான், இதயம் தசைகளால் ஆனது என்றும் அது சுருங்குவதால் அதிலுள்ள இரத்தம் வெளியேற்றப்படுகிறது என்றும் அவர் எடுத்துக்காட்டினார். ஒரே இரத்தம் ஒரு மூடிய வட்டப்பாதை மூலம் உடல்முழுவதும் செலுத்தப்படுகிறது என்று அவர் முதன் முதலில் நிரூபித்தார்.

நுண்ணோக்கியாளரான மார்செல்லோ மல்பீஜி 1628 - 1694 இரத்த நாளங்களின் மிக நுண்ணிய முடிவுக் கிளைகளான தந்துகிளைகளைக் கண்டுபிடித்தார்.


யான் ஸ்வாமெர்டாம் 1637 - 1680 இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களைக் கண்டுபிடித்தார். இவைதான் ஹீமோகுளோபின் நிறமிகள் மூலம் ஆக்சிஜனை எடுத்துச்செல்ல உதவுகிறது என்பது பின்னர் நடத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் தெளிவாகிறது.

ஆல்பரெக்ட் ஃபான்ஹேலர் என்ற ஸ்விட்சர்லாந்து நாட்டு ஆய்வாளர்கள். உள்ளமைப் பியலையும், செயலியலையும் முதன்முதலில் இணைத்து ஆராய்ந்தவர்கள் இவர்கள்தான். நரம்புகளும், தசைகளும் புறந்தூண்டல் மற்றும் உணர்ச்சி வசப்படும்போது எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விளக்க முற்பட்டனர். உடலின் எல்லா நரம்புகளும் மூளையில் அல்லது தண்டுவடத்தில் ஆரம்பிக்கின்றன அல்லது முடிகின்றன என்றும், இவை இரண்டும் தான் புறந்தூண்டல்களை உணரும், மற்றும் அதற்கான செயல்வினைகளை மேற்கொள்ளும் மைய உறுப்புகள் என்றும் ஹேலர் நிரூபித்தார்.

வில்ஹெல்ம் ஃபான் வால்டேயர் 1836 - 1921 என்ற ஜெர்மன் அறிஞர் நரம்பு இழைகளும் (நேசஎந கனைநெச) நியூரான் என்று அழைக்கப்படும் நரம்புசெல்களின் மாற்றுருதான் என்றும், ஒரு இழையின் நுனியிலிருந்து விரல்கள் போன்றப் பிரிந்து செல்லும் நுண்ணிய கிளைகள் மற்றொரு நரம்பு இழையில் இருந்து தோன்றும் நுண்ணிய கிளைகளுக்கு அருகில் அமையப்பெற்று சினாப்ஸ் என்ற சிறிய இடைவெளியை உண்டாக்குகின்றன என்று கூறினார்.

இர்மோன் ஈகஹால் 1852 - 1934 நியூரான் கொள்கையை உருவாக்கி, நரம்பு மண்டலத்தின் அடிப்படை அலகு நியூரான்தான் என்றும், ஒவ்வொரு நியூரானும் கிளைகளையும ஆக்ஸானையும் கொண்டுள்ளது என்றும் வலியுறுத்தினார்.

சோ. திராவிடராணி



# உலக கணித மேதை ஆர்க்கிமிடீஸ்

**ஆர்க்கிமிடீஸ் (கி.மு. 287 - 212)**
பிறப்பிடம்: சைரக்யூஸ், சிசிலி, மாக்னா க்ரேசியா (கிரேக்க நாடு)
வாழிடம்: சைரக்யூஸ், சிசிலி
துறை: கணிதம், இயற்பியல், பொறியியல், வானவியல்.

### இயற்பியல் துறையில் கண்டுபிடிப்புகள்:

**ஆர்க்கிமிடீஸ் கொள்கை:**

'நீர் அல்லது ஏதேனும் ஒரு திரவத்தில், ஒரு திடப்பொருளை மூழ்க வைக்கும் போது, அதனால் வெளியேற்றப்படும் நீர் அல்லது திரவம் மூழ்க வைக்கப்பட்ட பொருளின் எடைக்கு சம்மாக இருக்கும்'. இதுவே ஆர்க்கிமிடீஸ் கொள்கை ஆகும்.

**நெம்புகோல் தத்துவம்:**

ஒரு நெம்புகோலையும், ஒரு சிறிய தடுப்பானையும் பயன்படுத்தி மிகஅதிக எடையுள்ள பொருளையும் மிகக்குறைவான ஆற்றலால் நகர்த்த முடியும் என்பதே ஆர்க்கிமிடீஸ் கண்டுபிடித்த' நெம்புகோல் தத்துவம் ஆகும்.

"என்னிடம் ஒரு குறிப்பிட்ட நீளமுள்ள இரும்புகோலையும், அதனைத் தாங்கிப் பிடிக்கின்ற தடுப்பானையும் தந்தால், அதனை நெம்புகோலாகப் பயன்படுத்தி, நான் இந்த பூமியையே நகர்த்திக் காட்டுவேன்!" என்று ஆர்க்கிமிடீஸ் கூறினார்.

ஆர்க்கிமிடீஸ் கண்டுபிடித்த 'பொருள்களின் மிதக்கும் விதி' யின் அடிப்படையில் தான் பின்னாளில் 'பொருள்களின் சார்பு அடர்த்தி' (Relative density) கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தவிர நெம்புகோல் கம்பிகளின் உதவியால் இயங்கும் பல போர்க் கருவிகளையும் அவர் கண்டுபிடித்தார்.

**ஆர்க்கிமிடீஸ் திருகு:**

ஒரு உருளைக்குள்ளே சுழலும் திருகு வடிவ தகடு கொண்டதாகும். இது கையால் திருகப்பட்டது. இந்த ஆர்க்கிமிடீஸ் திருகு இன்றும் நிலக்கரி மற்றும் திரவங்கள் பம்ப் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

**ஆர்க்கிமிடீஸ் க்ளா:**

இது ஒரு கிரேன் போன்ற அமைப்பிலிருந்த ஒரு கொக்கி தொங்குவதாக அமைந்திருக்கும். எதிரி கப்பலை தூக்கி கடலில் மூழ்கடிக்க பயன்படுத்தப்படும்.

**ஆர்க்கிமிடீஸ் வெப்பக்கதிர்:**

ஆர்க்கிமிடீஸ் வரிசையாக கண்ணாடிகளை வைத்து அதன் மேல் சூரிய ஒளியை ரோமானியக் கப்பல்கள் மேல் குவித்து அக்கப்பல்களை தீப்பிடிக்க வைத்தார்.

### கணிதத்துறையில் ஆர்க்கிமிடீஸ் கண்டுபிடிப்புகள்:

ஆர்க்கிமிடீஸ் இன்பிநி டெசிமல்களை இக்கால தொகையீடு (integral calculus) போன்ற முறையில் பயன்படுத்தினார். மறுத்தல் மூலம் நிரூபித்தல் ( proof by contradiction ) முறையை பயன்படுத்தி கேள்விகளுக்கு அவர் எந்த துல்லியத் தேவையையும் பூர்த்தி செய்து பதிலளிக்கும் ஆற்றல் மிக்கவர். இந்த மதிநுட்பத்திற்கு பெயர் 'மெதட் ஆப் எச்ஹாசன்' (Method of Exhaustion).

**ஆர்க்கிமிடீஸ் இறப்பு:**

ஆர்க்கிமிடீஸ் ஒரு கணித வரைபடம் வரைந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு ரோமானிய வீரன் ஆர்க்கிமிடீசிடம், தளபதி மார்ஷெல்லசை வந்து பார்க்க ஆணையிட்டார். ஆனால் ஆர்க்கிமிடீஸோ தான் வேலையை முடிக்க வேண்டும் என்று கூறியதால் படை வீரன் கோபமுற்று கத்தியால் ஆர்க்கிமிடீஸைக் கொன்றுவிட்டார்.

# தேவர் அவர்களுக்குக் கட்சியுமில்லை; கொள்கையுமில்லை!

தோழர் பெரியார்

**கி.பி.1957, செப்டம்பர் 11. தாழ்த்தப்பட்டோர் உரிமைக்காகப் போராடிய மாவீரன் இம்மானுவேல்சேகரன் படுகொலை செய்யப்பட்டார். அந்த வழக்கில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்டார். அதுகுறித்து தோழர் பெரியார் விடுத்த அறிக்கை:**

'உயர் திருவாளர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை ஆட்சியாளர் கைது செய்தது பற்றிஒரு சில கும்பல்கள் முதலைக் கண்ணீர் வடிக்கத் தொடங்கியிருக்கின்றன. பார்ப்பன ஏடுகளான 'தினமணி', 'கல்கி' போன்றவைகள் அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று கசிந்துருகிக் கண்ணீர் மல்கி எழுதுகின்றன. கலவரப் பிரச்சினையோடு சம்மந்தமில்லாத பல்வேறு சங்கதிகளைக் கலந்து, முதலமைச்சர் மீது தவறான எண்ணங்களைக் கற்பித்து விஷமத்தனமாக எழுதியிருக்கின்றன.

'சமாதானக்குழு என்ற பெயரினால் புறப்பட்டிருக்கிற எதிர்க்கட்சிக்காரர்களின் கலவரக் கும்பலும் கோவிந்தா! கோவிந்தா!' என்று இம்மாதத்தில் சனிக்கிழமைக் காலையில்சிறுவர்கள் வீடு தோறும் சென்று கத்துவதுபோலக் கத்திக் கொண்டிருக்கிறது.

'திரு.தேவர் அவர்களுக்குக் கட்சியுமில்லை; கொள்கையுமில்லை. சுபாஷ் போஸ் உயிரோடிருக்கிறார்' என்பது மட்டும் ஒரு கட்சிக்குக் கொள்கையாகிவிடுமா? தேவர் தம்சிறந்த பேச்சுச் சக்தியைப் பயன்படுத்தி, தம் ஜாதிக்காரர்களின் தனிப் பெருந்தலைவராயிருந்துகொண்டு, அதன் மூலம் சட்டசபை அல்லது பார்லிமெண்டில் பதவி பெறுவது என்பதே அவரது பொதுத் தொண்டாயிருந்து வருகிறது.

எதிர்க்கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்று மந்திரிசபை அமைக்க முடிந்தால் அதில் தமக்கொரு மந்திரி கிடைக்குமா என்பதற்காக 2, 3 பேர்களைச் சேர்த்துக் கொண்டு தனிக் கட்சியமைத்தவராதலால் அந்தவாய்ப்பு இல்லையென்றவுடனேயே பார்லிமெண்ட் உறுப்பினர் பதவியை வைத்துக் கொண்டு (அதிக ஊதியம் அதில் இருப்பதால்) எம்.எல்.ஏ. பதவியை உதறி விட்டார். தன்னந் தனியாய்ப் பார்லிமெண்டில் போய் இவர் என்ன சாதிக்கப் போகிறார் என்பதைப் பற்றி அவரைத்தான்கேட்கவேண்டும்.

ஜாதி வெறியை வளர்த்து மற்ற ஜாதிகளை ஒடுக்கி வைத்துத் தான் ஒரு தனிக்காட்டு ராஜாமாதிரி இருந்து வந்தால் ஜாதி ஒழிப்புக் காரராகிய நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை. ஜாதிவெறி வேரூன்றிவிட்டால் ஜனநாயகத்துக்கோ, பகுத்தறிவுக்கோ, பொதுநலத்தொண்டுக்கோ, ஒழுக்கத்துக்கோ, நீதிக்கோ இடமில்லை.

தேவர் சிறைவாசத்தை நாமும் விரும்பவில்லை என்றாலும், இந்தச் சூழ்நிலையில் அவரைச் சிறைப் பிடிக்காதிருந்தால் சாதிச்சண்டை நின்றிருக்காதென்பது உறுதி. அவர்வெளியிலிருந்த வரை கலவரம் நடந்து கொண்டிருந்ததும், கைது செய்யப்பட்ட பின்கலவரம் அடியோடு ஓய்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று அவருக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்ற சி.ஆர். (இராஜகோபாலாச்சாரி), கும்பலைச் சேர்ந்தவர்களுக்கு ஒன்று நினைவூட்டுகிறோம். இதே சி.ஆர். அவர்கள் முதலமைச்சராயிருந்த போதுதான் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் திரு.முத்துராமலிங்கனார் கைது செய்யப்பட்டுப் பல ஆண்டுகள் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

2 - வது உலகப்போரின்போது இவர் ஜாதிச்சண்டைக்குக் காரணமாயிருப்பார், போர் எதிர்ப்புப்பிரச்சாரஞ் செய்வார் என்ற காரணத்திற்காகச் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்.

இன்றைய நிலையிலுங்கூட முன்கூட்டியே தேவரைத் தனிப்படுத்தியிருந்தால் இத்தனை உயிர்கள் பலியாகியிருக்குமா? இவ்வளவு பொருட்சேதம் ஏற்பட்டிருக்குமா? இத்தகைய ஆதி திராவிடக் குடும்பங்கள் ஊரைவிட்டு வெளியேறி தவிக்குமாறு நேர்ந்திருக்குமா?

போலீஸ் நடவடிக்கை சிறிது தாமதமானதால்தான் இவ்வளவு சேதம் ஏற்பட்டது. இன்னும் பல மாதங்களுக்குப் போலீஸ் படை கலவரப் பகுதிகளில் காவல் புரிந்துதான் தீர வேண்டும். போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தினால் மாண்டவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றவர்கள், மாதா கோயிலுக்குள் புகுந்து ஏழை மக்களைச் சாதிவெறியர்கள் பதைக்கப் பதைக்கச் சுட்டுக் கொன்றும், அடித்தும், பெண்களை அவமானப்படுத்தியும் மிருகத்தனமாக நடந்துகொண்டதைக் கண்டிக்காமலும் வருந்தாமலும் இருப்பது ஏன்?

'தினகரன்' எழுதிய 'முதுகுளத்தூர் கலவரம்' நூலிலிருந்து




அதி அசுரன்

# கல்பாத்தி முதல் சேஷ சமுத்திரம் வரை

2015 ஆகட் 15 இந்தியச் சுதந்திர நாளில், விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்திலுள்ள சேஷ சமுத்திரம் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் தங்கள் பகுதியில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு திருவிழா நடத்தி தேரோட்டம் செய்யவிருந்த நிலையில், தேர், தீ வைத்துக் கொளுத்தப்பட்டு, 9 வீடுகள் முழுமையாகத் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

சேஷ சமுத்திரத்தில் சுமார் 100 தலித் குடும்பங்களும், 5000 வன்னியர்களும் வாழ்கின்றனர். இக்கிராமத்தில் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட சுப்பிரமணியம் என்பவர் தலித் மக்களிடம் “தன்னை வெற்றி பெறச் செய்தால் தனது செலவில் அம்மன் கோவிலுக்குத் தேவையான தேரைச் செய்து தருவதாக” வாக்களித்துள்ளார். அதன்படி வென்று, தேரைச் செய்து கொடுத்துள்ளார். ஆனால் அந்தத் தேர் பொதுப்பாதையில் வலம் வரும் என்று அறிவிப்புகள் வெளியான உடனே, சேரிப்பகுதி மாரியம்மனுக்கு வன்னியர்கள் தடை விதித்து விட்டனர்.

தடையை எதிர்த்துத் தொடர்ச்சியான சமரசப் பேச்சுக்கள் நடைபெற்றன. இந்துக் கடவுளையே வழிபடமுடியாத நாங்கள் புத்தம் மதம் மாறப்போகின்றோம் என்று கடந்த ஆண்டு தலித் மக்கள் அறிவித்துள்ளனர். மதமாற்ற அறிவிப்பால் பதறிய மாவட்ட நிர்வாகம் 16 ஆம் தேதி தேரோட்டம் நடத்த அனுமதி வழங்கியுள்ளனர். ஆடல், பாடல் போன்ற கொண்டாட்டம் எதுவும் இல்லாமல் அமைதியாக நடத்த வேண்டும் என்பதை சமரசக்கூட்டத்தில் இருதரப்பினரும் ஏற்றுள்ளனர்.

ஆகஸ்ட் 15 ஆம் அன்று கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற பா.ம.க அன்புமணியின் கூட்டத்திற்குச் சென்றுவந்த பா.ம.கவைச் சேர்ந்தவர்கள் அன்று மாலை 7 மணிக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் இலட்சக்கணக்கில் செலவழித்து தயார்செய்திருந்த மாரியம்மன் தேரை எரித்துத் தாக்குதலைத் தொடங்கியுள்ளனர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுப்பாதையில் தேர் இழுக்க முயன்றதால் நடந்த ஜாதியத் தாக்குதல் பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் பொதுப்பாதையில் நடப்பதற்கே உரிமையற்று இருந்த காலத்தையும், அதை எதிர்த்து நீதிக்கட்சியும் பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் ஆற்றிய சாதனை ஒன்றைப் பார்ப்போம்.

1924 ஆம் ஆண்டு ஆகட் 24 அம் நாள் மதறா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று.

**“எந்த நகரம் அல்லது கிராமத்திலுள்ள பொது ரஸ்தா, தெரு அல்லது பாதை வழியாக எந்த வகுப்பைச் சேர்ந்த ஆட்களும் நடந்து போவதைப்பற்றி, தடையொன்றுமில்லையென்றும், மேலும் எந்த பொது ஆபீஸ் கட்டிடம், கிணறு, குளம் பொதுஜன வேலை நடக்கிற கட்டிடங்கள் முதலியவைகளை ஏனைய ஜாதி இந்துக்கள் எந்தவிதமாய் உபயோகிக்கிறார்களோ, அதைப்போலவே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும், அவைகளை உபயோகித்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை.”**

இந்தத் தீர்மானம் 1924 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ல் அரசு உத்தரவாகவே வெளியிடப்பட்டது. உத்தரவு எண்: 2660 உள்ளூர் மற்றும் மாநகராட்சி, 25 செப்டம்பர், 1924. இந்த உத்தரவைப் பிறப்பித்தவர், தோழர் இரட்டைமலை சீனிவாசன் ஆவார். இப்படி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் அரசு உத்தரவாகவே நிறைவேற்றப்பட்டாலும், அந்த உத்தரவில் ஒரு குறையும் இருந்தது. அரசின் உத்தரவைக்கடை பிடிக்காவிட்டால் அதற்கு என்ன தண்டனை என்பது குறிப்பிடப்படாமல் இருந்தது.

எனவே நீதிக்கட்சி மற்றும் சுயமரியாதை இயக்கத்தின் ஆதரவாளரான ஆர்.வீரையன் அந்த உத்தரவில் திருத்தம் கோரினார்.

பொதுப்பாதைகளைப் பயன்படுத்த ஆதிக்கஜாதிகள் தடை விதித்தால் அதற்குரிய தண்டனையையும் இணைத்து திருத்தம் கோரி புதிய முன்வரைவை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். அப்போது பெரியார், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தோழர் வீரையன் அவர்களின் திருத்த முன்வரைவை அனுப்பி, அதை ஏற்றுக்கொள்ளுமாறு ஒரு வேண்டுகோள் விடுக்கிறார். அந்த வேண்டுகோள் 25.10.1925 குடி அரசில் வெளியாகி உள்ளது.

பொதுப்பாதையில் நடப்பதற்கு உரிய உரிமையைப் பெற்ற சமுதாயம் அடுத்து, பொதுப்பாதையில் தேர் இழுப்பதற்குப் போராடத் தொடங்கியது. சேஷசமுத்திரத்தைப் போலவே 'பொதுப்பாதையில் தேர் இழுப்பது' தொடர்பாக கேரள மாநிலம் கல்பாத்தியில் நடைபெற்ற ஒரு போராட்டத்தைப் பற்றி குடி அரசு வெளியிட்டுள்ள செய்தியைப் பார்ப்போம்.

“பாலக்காட்டுக்கு அருகிலுள்ள கல்பாத்தியில் பார்ப்பனத் தெருக்களில் ஈழுவர்கள் ( தீண்டத் தகாதார், பார்க்கத்தகாதார்) நடக்கக்கூடாது என்று பார்ப்பனர்கள் தடைசெய்து வைத்திருந்ததையும் , ஈழுவர்களின் ரதம் அவ்வழியே செல்லக்கூடாது என்று அரசாங்கம் விதித்திருந்த தடையையும் பற்றி 'தமிழ்நாடு ' என்ற நாளேடு எழுதிய தலையங்கத்தை 'குடி அரசு' 27. 12. 1925 ஆம் தேதியிட்ட இதழ் மறுபிரசுரம் செய்தது. அப்போது ஆளுநரின் நிர்வாக சபையில் சட்டத்துறை உறுப்பினராக (சட்டமந்திரி) இருந்த சர்.சி.பி. ராமசாமி அய்யர், ஈழுவர்களின் ரதம் சென்றால் அங்கு கலவரம் ஏற்படும் என்று கருதியே அரசாங்கம் தடைவிதித்திருப்பதாக நியாயம் கூறினார்.

சென்னை நகரில் பார்ப்பனப் பிரமுகர்களின் கூட்டமொன்றைக் கூட்டி, எல்லாக்கட்சிப் பார்ப்பனர்களும் ஒன்றுசேர வேண்டும் என்று அவர் பேசியிருந்ததையும் 'தமிழ்நாடு' சுட்டிக் காட்டியிருந்தது. சென்னை சட்டமன்றத்தில் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றுடன் தோழமை கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு (நியமன) உறுப்பினர் ஆர். வீரையன், பொதுச்சாலை களில் எல்லாச் சாதியினரும் நடக்க அனுமதிக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது அதை எதிர்த்துப் பேசிய சுயராஜ்யக் கட்சிப் பார்ப்பன உறுப்பினர் நரசிமாச்சார்லு

“இன்று சாலையில் நடக்க உரிமை வேண்டும் என்பார்கள், நாளை ஆலயப்பிரவேச உரிமை கேட்பார்கள், பிறகு கலப்பு மணம் வேண்டும் என்பார்கள். அதனால் கலவரம் ஏற்படும்” என்று பேசினார்.-குடி அரசு - 22.11.1925

கல்பாத்தியிலிருந்து சேஷ சமுத்திரம் வரை எண்ணற்ற தீண்டாமைக் கொடுமைகள், அவற்றுக் கெதிரான போராட்டங்கள் என வரலாறு நெடுகிலும், தீண்டாமைக்கொடுமைகளை ஒழிக்க, நீதிக்கட்சி மற்றும் சுயமரியாதை இயக்கம், ஆதி திராவிட மகாஜனசபை போன்ற அமைப்புகளில் பணியாற்றிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத் தலைவர்களும், தோழர்களும் இணைந்து போராடினர். பல வெற்றிகளைக் குவித்தனர். தீண்டாமைக் கொடுமைகளுக்குக் காரணமாக இந்து மத சாஸ்திரங்கள் அடையாளப்படுத்தப் பட்டன. இந்துசாஸ்திர, சம்பிரதாயங்களை நடை முறைப்படுத்தும் பார்ப்பனர்கள் தனிமைப்படுத்தப் பட்டு, தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப் பட்டோர் ஒருங்கிணைப்பு முதன்மைப்படுத்தப்பட்டது.

ஆதி திராவிட மகா ஜனசபை, சுயமரியாதை இயக்கம் மட்டுமல்லாமல் 'மருத்துவர் சங்கங்'கள் உள்ளிட்ட, தமிழ்நாட்டின் பல ஜாதிச்சங்கங்களே தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக 'மனுசா திரம் கொளுத்தப்பட வேண்டும்' என தீர்மானங்களை நிறைவேற்றின. அப்படி ஒரு ஆரோக்கியமான போக்கு 1925 - 30 ஆண்டுக்காலங்களில் நிலவியதைக் குடி அரசின் ஊடாகப் பார்க்க முடிகிறது.

ஆனால் அண்மைக்காலங்களில் தீண்டாமை வன்கொடுமைக் குற்றங்கள் என்பவை, 'தாழ்த்தப்பட்டோர் மீது பிற்படுத்தப்பட்டோரின் தாக்குதல்' என்ற அளவில் மட்டுமே கவனிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் மட்டுமே தீர்வுகளும் முன்வைக்கப்படுகின்றன. நேரடியாகக் களத்தில் தாக்கும் பிற்படுத்தப்பட்ட ஜாதிகள் தண்டிக்கப்பட வேண்டியவைதான். அதில் மாற்றுக்கருத்து இல்லை. அதேசமயம் ஜாதியத் தாக்குதல்களுக்குக் காரணமான இந்து மதம், இந்து சாஸ்திர, சம்பிரதாயங்கள் ஆகியவையும் அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

1925 இல் பார்ப்பனர்கள் நேரடியாக எதிர்த்தார்கள். இன்று சேஷசமுத்திரத்தில் பார்ப்பனீயவெறி பிடித்த வன்னியர்கள் எதிர்க் கின்றார்கள்.

பார்ப்பனர்களால் பரவும் ஜாதி, தீண்டாமை பற்றி பொரியார் கூறகிறார்:-

“ஒரு தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடிக்கவரும் ஒரு பிராமணப்பெண் குடத்தில் கொஞ்சம் தண்ணீரும் கையில் கொஞ்சம் புளியும் கொண்டு வருவதோடு, முகத்தையும் கோணிக்கொண்டு வருகிறாள். குழாயண்டை வரும்போதே நிலத்திலெல்லாம் தண்ணீர் தெளித்துக்கொண்டு குழாயின் மேலும் தண்ணீரைக் கொட்டி புளியால் குழாயை தேய்த்து கழுவியபிறகு தண்ணீர் பிடிக்கிறாள்.

இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு பிராமணரல்லாத இந்துப்பெண் தானும் அரைக்குடம் தண்ணீரும் கையில் ஒரு புளி உருண்டையும் கொண்டு முகத்தை இழுத்துக்கொண்டு அந்த பிராமணப்பெண் செய்ததுபோலவே செய்துவிட்டு தண்ணீர் பிடித்து கொண்டு போகிறாள்... பஞ்சமப்பெண் அந்த வீதியில் இல்லாததால் அவர்கள் இதைப் பழக சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இப்படி

*ஒருவரைப்பார்த்து ஒருவர் பழகியே தீண்டாமையென்னும் தொத்து நோய் தேசம் முழுவதும் பரவி வருகிறது.- குடி அரசு 22.11.1925*

*இதுபோன்ற தீண்டாமைக் கொடுமைகளுக்கு, இந்து மதத்தை விட்டே வெளியேறுவதுதான் சரியான, நிரந்தரத் தீர்வாக இருக்கும் என தோழர் அம்பேத்கர் உறுதியாக நம்பினார். திட்டமிட்டபடி1956 இல் இலட்சக் கணக்கான மக்களுடன் புத்தமதத்திற்கு மதம்மாறியும் காட்டினார். தோழர் பெரியாரும் அதையே தீர்வாகக் கூறகிறார்.*

*மதமாற்றம் என்பதெல்லாம் மிகநீண்ட நெடிய போராட்டம். அது காலப்போக்கில் தான் உருவாகும் என நமக்கு நாமே சமாதானம் கூறிக்கொண்டு, இந்து மதத்தைவிட்டு வெளியேறு வதைத்தள்ளிப் போட்டுக்கொண்டிருப்பது தீண்டாமைக் கொடுமைகளை ஒழிக்க சிறிதளவும் பயன்படாது.*

*விடுதலைச்சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தோழர் இரவிக்குமார் அவர்கள் கடந்த 14.04.2015 அன்று புதுச்சேரியில் நடந்த தோழர் அம்பேத்கரின் 125 ஆவது பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரையில்,*

**"தலித் மக்கள் இந்துக்களின் சர்வாதிகாரத்தை எதிர்கொள்ளவேண்டுமென்றால் அதற்கு வெளியிலிருந்து ஆதரவை அவர்கள் பெறவேண்டும் என்று சொன்ன அம்பேத்கர் அதற்காகத்தான் மதமாற்றத்தை முன்மொழிந்தார். அவர் மதம் மாறி சுமார் அறுபது ஆண்டுகள் ஆகிவிட்டன. அதன் விளைவுகள் அம்பேத்கர் எதிர்பார்த்தபடி அமைந்தனவா என்று நாம் ஆராயவேண்டும். தலித் மக்களின் பலத்தை அதிகரிக்கவேண்டும் என்பதற்காக அவர் தேர்ந்தெடுத்த பௌத்தம் உண்மையிலேயே அவர்களுக்கு உதவியதா? என்று பார்க்கவேண்டும்...மதமாற்றம் குறித்து அம்பேத்கர் மேற்கொண்ட முடிவு சரியா, பௌத்தத்தைத் தழுவுவது நமது பலத்தை அதிகரிக்க உதவுமா என மீளாய்வு செய்ய வேண்டும்"**

*தாழ்த்தப்பட்ட மக்கள் இழிவிலிருந்து விடுபட சரியான தீர்வு, தோழர் அம்பேத்கர் உறுதியாக நடத்திக் காட்டிய மதமாற்றம் தான். அந்த முடிவை மீளாய்வு செய்கிறேன் என்பதும், ஆராய வேண்டும் என்பதும் முழுக்க முழுக்க பார்ப்பனர்களுக்கும், இந்துமத ஆதிக்கவாதி களுக்கும் பயன்படும் வாதமாகும். தோழர் இரவிக்குமாரின் இந்த வாதம் குறித்து எந்த எதிர்ப்பும், எந்த விமர்சனமும், விவாதமும் உருவாகாமல் இருப்பது மிகவும் ஆபத்தான போக்காகும்.*

*இந்து மதத்தில் இருந்து விலகாமலேயே ஜாதி, தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்துவிட முடியும் என்று நம்புபவர்களுக்கு ஒரு கேள்வி. இந்து மதத்தில் நீடித்துக்கொண்டே ஜாதி இழிவை மட்டும் ஒழிக்க வேண்டுமானால் - இது போன்ற தீண்டாமை வன்கொடுமைகள் நடக்கும் போது நாம் எதிர்க்க வேண்டிய இலக்கு என்ன? அரசாங்கம் மட்டுமா? பிற்படுத்தப்பட்டோர் மட்டுமா?*

*ஜாதி இழிவை நம்மீது திணித்துள்ள இந்து மதத்தின் தற்போதைய அங்கீகாரமான நிறுவனங்களான சங்கரமடம், ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி போன்ற அமைப்புகளைநோக்கித்தானே நமது எதிர்ப்புகளைச் செலுத்த வேண்டும்? முழுமையான இந்துராஷ்ட்ரா அமைக்கப் போராடும் ஆர்.எஸ்.எஸ். ஸின் தலைவர்கள், சங்கராச்சாரி, இராமகோபாலன் தொடங்கி எச்.இராஜா, அர்ஜூன் சம்பத் வரை உள்ள இந்துத் தலைவர்களை நோக்கி அல்லவா நமது போராட்டங்களைத் தொடங்கியிருக்க வேண்டும்?*

*'தாய் மதம் திரும்புவோம்' என அறிவித்து வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கில் பணம்சுருட்டும் இந்து மதத்தலைவர்கள், இந்து மத மடங்கள் - இந்து ராஷ்ட்ரக் கனவுக்காரர்கள் ஆகிய அனைவரும், ஏற்கனவே இந்து மதத்தில் உள்ளவர்களின் சிக்கல்களுக்கும் தீர்வுகொடுத்துத்தானே ஆகவேண்டும்?*

*மசூதி வழியாகப் பிள்ளையார் போக முடியாவிட்டால் எத்தனை தலை உருளுகிறது? திண்டுக்கல்லில் இ லாமியரோடு சண்டையிட இராமகோபாலன் நேரடியாக வருகிறான். ஐஸ்-ஹவுஸ் பகுதிக்கு அனைத்து இந்துத் தலைவர்களும் படையெடுக்கிறார்கள். ஆனால் சேஷ சமுத்திரத்தில் பொதுத்தெருவில் மாரியம்மனை அனுமதிக்காத வன்னியர்களை எதிர்த்து எந்த இந்துத்தலைவன் வந்தான்? வீரத்துறவியோ, காஞ்சிபுர 'பலான' துறவியோ எவரையுமே காணோமே?*

*ஒரு சோதனை முயற்சியாக, ஜாதி ஒழிப்பில் அக்கறையுள்ள அனைத்து அமைப்புகளும்,* **இனி தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் ஜாதியத் தாக்குதல் நடந்தாலும், உடனடியாக சங்கர மடத்தை முற்றுகையிட்டுப் பார்ப்போம்! இராமகோபாலன் - ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் - அர்ஜூன் சம்பத் - சங்கராச்சாரி கொடும்பாவிகளை எரித்துப் பார்ப்போம்! ஆங்காங்கே பூணூல்களை அறுத்துப் பார்ப்போம்! கொளுத்தப்படும் குடிசைகளுக்கான இழப்பீட்டையும், இழந்த உயிர்களுக்கான இழப்பீட்டையும் இந்துமத மடங்களின் சொத்துக்களிலிருந்து பறிமுதல்செய்து கொடுப்போம்** *என்று அறிவித்துப் பார்ப்போம்.*

*ஆர்ப்பாட்டங்களும், அறிக்கைகளும் ஏற்படுத்தும் விளைவுகளைவிட இவை அதிகமான பலன்களைக்கொடுக்கும். மதத்தை விட்டு வெளியேறுவது என்ற தோழர் பெரியார் - தோழர் அம்பேத்கரின் முடிவுகளை ஏற்க இயலாதவர்கள் மேற்கண்ட போராட்ட வடிவங்களை முன்னெடுக்க முன்வர வேண்டும்.*

**உடனடியாக விடுதலை முயற்சியில் ஈடுபடவேண்டும்**

நமக்கு இன்றைய இந்திய ஆட்சியில் அரசியல் பிரச்சனை எப்படி இருந்தாலும், சமுதாயப் பிரச்சனையில் நாம் இன்று இருக்கும் இழிதன்மையில் இருந்து, அதாவது சூத்திரனாக, தாசி மகனாக நம் தாய்மார்கள் தாசிகளாகச் சட்டப்படி, சாத்திரப்படி இருக்கும் நிலைமையை மாற்றிக்கொள்ள முயற்சிக்காமல் நாம் இருக்க முடியுமா?

இந்தியாவில் நாம் இருக்கும் வரை இந்துவாகத்தான் இருந்து ஆகவேண்டும். இந்து என்றாலே, முஸ்லீம், கிறிஸ்துவம் தவிர மற்ற யாவருமே சூத்திரர் தாசிமக்கள் தான் என்று இருப்பதால், ஏதாவது முயற்சி செய்துதான் ஆகவேண்டும். நம் மக்கள் எளிதில் மதம் மாறமாட்டார்கள். மதம் மாறுவதை இழிவாய்க்கக் கருதுபவர்களாவார்கள்.

ஆதலால் நாம் உடனடியாக விடுதலை அதாவது இந்தியக்கூட்டாச்சியிலிருந்து விலகி, சுதந்திரத் தமிழ்நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாக வேண்டியவர்களாக இருக்கிறோம். இம்முயற்சிக்கு இன்றைய நம் தி.மு.க. ஆட்சி இணங்கும் என்று கருதமுடியாது. ஏனெனில், தி.மு.க. ஆட்சி விரும்புவதெல்லாம் இந்தியக் கூட்டாச்சி ஆதிக்கத்திற்கு உள்பட்ட மாகாண சுயாட்சிதான் அது விரும்புகிறது.

மாகாண சுயாட்சி என்றால், அரசியலில் தான் ஏதோ சில மாறுதல்களைச் செய்து கொள்ள முடியுமே தவிர, சமுதாயத் துறையில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்ய முடியாது.

**'இந்து என்றால் சட்டப்படியான விளக்கம்'**

இந்திய அரசியல் சட்டத்தில் சமுதாய (மத) சம்பந்தமான காரியங்களைப் பற்றி பழைய மனுதர்ம நிலையை மிகமிகப் பலப்படுத்திக் கொண்ட படியிருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டு மானால், கர்ப்பகிரகத்திற்குள் சூத்திரன், அதாவது பண்டார சன்னதி உட்பட இந்து என்ற தலைப்பில் வரும் எவருமே, பார்ப்பான் தவிர்த்து எவருமே செல்ல முடியாதென்று உயர்நீதி (சுப்ரீம்) மன்ற தீர்ப்பு இருப்பதினாலும், இன்னும் கோவிலுக்கு சாமி தரிசனத்திற்கென்று போகும் யாருமே தீண்டத்தகாதவர்கள் போல், வாயில்படிக்கு வெளியில்தான் எட்டி நிற்கவேண்டும் என்றால், மற்றபடி எதில் நாம் மாறுதலைக் காணமுடியும்?

இதை அமுலில் இருக்கும் இந்து லா என்னும் சட்டத்திலும், பல உயர்நீதிமன்றங்களின் தீர்ப்பிலும், பார்ப்பனரல்லாத இந்து மக்கள் என்பவர்களைக் மிகமிக இழிவாகக் கூறி, நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. இந்து என்னும் சொல்லுக்குச் சட்டத்தில் கொடுத்திருக்கும் விளக்கம் என்னவென்றால் "கிறிஸ்துவர்கள் - முஸ்லீம்கள் தவிர்த்த இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் இந்துக்கள் ஆவார்கள்" இதன்படி நாத்திகன், பகுத்தறிவுவாதி, பரதேசி முதலிய சகலரும் இந்துக்கள் ஆகி சூத்திரர், பார்ப்பானின் தாசி மகன் என்று ஆகிவிடுகிறார்கள்.

**சுயமரியாதை இயக்கத்தின் 50 வருட சாதனை**

நான் முதலில், நான் இந்து அல்ல என்று சொல்லிவிட்டால் இழிவு நீங்கிவிடும் என்று தான் கருதினேன். பிறகு சட்டங்களைப் பார்க்க ஆரம்பித்த பிறகு கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள் தவிர்த்த, இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் இந்துக்கள் - இந்துக்கள் என்றால் சூத்திரர்கள், வேசி மக்கள் என்று பல இடங்களில் காணப்படுகின்றன. ஆதலாலேயே தீவிர முயற்சி எடுக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

இன்று நம் நாட்டில் இந்துக்கள் எல்லோருக்குமே அரசியலில்தான் முக்கியக்கவனம் இருக்கிறது. அன்றியும் நாட்டுப் பிரிவினை என்றால், எல்லா மக்களுமே பயப்படுகிறார்கள். காரணம் பதவி கிடைக்காதே என்கின்ற காரணம் மாத்திரமல்லாமல், சிறைக்குச் செல்ல வேண்டுமே என்று பயப்படுகிறார்கள். 50 வருட காலமாக சுயமரியாதை இயக்கம் சாதித்தது என்ன என்று பார்த்தால், சிறிது படிப்பு - பல பதவி உத்தியோகம் பெற நேர்ந்ததோடு அரசியலில் பார்ப்பனர் கொட்டத்தை நல்ல அளவுக்கு அடக்கிற்று என்பதல்லாமல் சமுதாயத் துறையில் உள்ள அடிப்படை இழிவு நல்ல அளவுக்கு பலம் பெற்றுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

**பதினாயிரக்கணக்கில் பாட்ஜீக்கு ஆர்டர்**

எனவே, நாம் சட்டத்தைப் பற்றிப் பயப்படாமலும், பதவி கிடைக்காதே என்று கவலைப் படாமலும், சுதந்திரத் தமிழ்நாடு பெற ஒவ்வொருவரும் முடிவு செய்துகொண்டு முன்வர வேண்டியது ஒவவொரு தமிழனுக்கும் அவசியமான காரியம் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**"சுதந்திரத் தமிழ்நாடு எனது இலட்சியம்"**

என்ற சொற்களை ஒவ்வொருவரும் இலட்சியச் சொல்லாகக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். பதினாயிரக் கணக்கில் பாட்ஜீக்கு ஆர்டர் கொடுத்து தயார் செய்து மக்களுக்கு வினியோகிக்க ஆசைப்படுகிறேன். பொது மக்களுக்கும் இதுவே இலட்சியச்சொல்லாக (கூப்பாடாக) இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். பொதுமக்களே ! இளைஞர்களே! பள்ளி, கல்லூரி மாணவர்களே! மாணவிகளே! உறுதி கொள்ளுங்கள்! உறுதி கொள்ளுங்கள்! உறுதி கொள்ளுங்கள்!.

ஈ.வெ.ராமசாமி - 17.09.1973 - விடுதலை 95 வது பிறந்தநாள் மலர்

# மைய அரசு அலுவலர்களின் 2008 ஆம் ஆண்டின் வகுப்புவாரியான எண்ணிக்கையைக் காட்டும் வரைபடம்

மைய அரசு அலுவலர்களின் வகுப்புவாரியான எண்ணிக்கை மண்டல் குழு அறிக்கையில் 1980ஆம் ஆண்டுக்குத் தரப்பட்டுள்ளது; மைய அரசின் பணியமர்த்தம் மற்றும் பயிற்சித் துறையின் இணை அமைச்சர் வி.நாராயணசாமி 18.11.2008ஆம் நாள் நாடாளுமன்றத்திற்கு அளித்த விடையில் 2008ஆம் ஆண்டுக்குத் தரப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கை விழுக்காடாக மாற்றப்பட்டு வரைபடத்துடன் இங்கே வாசகர்களுக்கு அளிக்கப்படுகிறது.

பட்டியல் வகுப்புகளுக்கு 1943ஆம் ஆண்டிலிருந்து இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது; பழங்குடியினருக்கு 1950ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு 1990ஆம் ஆண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டு 1994ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மண்டல் குழு அறிக்கையில் 3743 சாதிகள் - சமுதாயங்கள் மட்டுமே இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மக்கள் தொகையில் அவ்வகுப்புகளின் விழுக்காடு 52 ஆகும். அதன் பிறகு மைய அரசு மேலும் 600 சாதிகளை அப்பட்டியலில் சேர்த்துவிட்டது. எனவே இப்போதுள்ள பட்டியல்படி மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை 57 விழுக்காடாக உயர்ந்துவிட்டது.

## மைய அரசு அலுவலர்களின் வகுப்புவாரியான எண்ணிக்கை

| வ. எண் | வகுப்பின் பெயர் | 2008 ஆம் ஆண்டு விழுக்காடு | 1980 ஆம் ஆண்டு விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | **முதல்நிலை அலுவலர்கள்** | | |
| அ. | பட்டியல் பழங்குடிகளும் பட்டியல் வகுப்புகளும் | 17.39 | 5.68 |
| ஆ. | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் | 5.44 | 4.69 |
| இ. | உயர் வகுப்புகள் | 77.17 | 89.63 |
| | மொத்தம் | 100.00 | 100.00 |
| 2 | **இரண்டாம் நிலை அலுவலர்கள்** | | |
| அ. | பட்டியல் பழங்குடிகளும் பட்டியல் வகுப்புகளும் | 20.60 | 18.18 |
| ஆ. | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் | 3.97 | 10.63 |
| இ. | உயர் வகுப்புகள் | 75.43 | 71.19 |
| | மொத்தம் | 100.00 | 100.00 |
| 3 | **3ஆம், 4ஆம், 5ஆம் நிலை அலுவலர்கள்** | | |
| அ. | பட்டியல் பழங்குடிகளும் பட்டியல் வகுப்புகளும் | 24.79 | 24.40 |
| ஆ. | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் | 7.11 | 18.98 |
| இ. | உயர் வகுப்புகள் | 68.10 | 56.62 |
| | மொத்தம் | 100.00 | 100.00 |
| 4 | **மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை** | | |
| அ. | பட்டியல் பழங்குடிகளும் பட்டியல் வகுப்புகளும் | 24.33 | 18.72 |
| ஆ. | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் | 6.90 | 12.55 |
| இ. | உயர் வகுப்புகள் | 68.77 | 68.73 |
| | மொத்தம் | 100.00 | 100.00 |
| | **வகுப்புவாரியான இந்திய மக்கள் தொகை** | | |
| அ. | பட்டியல் பழங்குடிகளும் பட்டியல் வகுப்புகளும் | 25.5 | 22.5 |
| ஆ. | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் | 57.0 | 52.0 |
| இ. | உயர் வகுப்புகள் | 17.5 | 25.5 |
| | மொத்தம் | 100.0 | 100.0 |













